A. PUBLIC LIBRARY JAFFNA

# இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 2 - இருக்கை 6 ஒரு பொல்லாப்புமில்லை 05-08-2008

50/-



## பிரியாமணியின் பிரியாத ஆசை

## ஐயோ! தொலைச்சிட்டன்..

## பிரபஞ்ச அழகி

ISSN 1800-3699

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வினைத்திறன் மிக்க சேவை நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல் என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பிரதேச சபை,
நகரசபை, மாநகரசபை என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"

உள்ளூராட்சி சபைகளின் வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை பொது மக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே
ஆசிய நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.

THE ASIA FOUNDATION

68





பிரபஞ்ச அழகி 82




60



பிரியாமணியின்
பிரியாத ஆசை 88

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருக்கிறம்

வணக்கம் வாசகர்களே

கொப்பளித்த பன்னீர்



ஸ்ரீலங்கா கொப்பளித்த பன்னீரில் தெற்காசியப் பிராந்தியமே மகிழ்ந்து விடைபெற்றிருக்கிறது.
கூழுக்கு அலைந்த கொழும்பு நாய்களையும் பிச்சைக்காரர்களையும் இன்னும் காண முடியவில்லை. இன்றோ நாளையோ அவர்களும் திரும்பி விடலாம். முன்பிருந்ததை விட அவர்களின் உறவுகள் வேகமாகக் கூடலாம். அதற்கான வாய்ப்புகள் தான் இப்போது நிறையவே உள்ளன.
கொழும்பு மாநகர சபை பழையபடி ஓய்வெடுக்கும். குப்பைகள் நகரத்திலும் சேரக்கூடாத இடங்களிலும் இன்னுமே சேரலாம். மூடப்பட்ட வீதிகள் திறக்கப்படும்.

கொப்பளித்த பன்னீர்களின் நினைவுகளை மறந்து, பழையபடி கூழின் நினைவுகள் அரசிற்கு வரும். ஒருவார காலமாக அயலவர்களோடு தேர்த்திருவிழாவுக்கு சென்று திரும்பிய சிறுவன் ஒருவனின் மகிழ்ச்சியிருந்தாலும், முன்பை விட அதிக ஏக்கமே அரசிற்கு மிஞ்சியிருக்கும்.

நடந்த தேர்த் திருவிழாவின் மகிழ்ச்சியை விட உள்வீட்டின் நடப்பு விவகாரங்கள் ஏற்கனவே இருந்ததை விட அரசிற்கு மிக அதிகமாக உறைக்கும். வழமையான உள்வீட்டு விளையாட்டுக்கள் இன்னும் முனைப்புப் பெறும்.

ஆடுகிற சின்னவன் திருவிழாக்காலத்தில் ஒதுங்கியிருந்ததை மறந்து இன்னும் தீவிரமாக ஆடக் கூடும். அன்றும் இன்றும் எந்த ஆட்டத்திலும் சேராமல் பார்த்துக் கொண்டிருக்கிற எங்கட பாடுதான் பரிதாபமாக இருக்கப் போகுது பாருங்கோ.

யோச்னைகளோடு
ஆசிரியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு இயந்திரமும் அதன் பங்காளிகளாக உருமாறும் பிரஜைகளும்

பதிப்பகத்தார்

சென்ற மாதம் 1983 ஜூலை கலவரங்களின் 25 வருட நினைவுகூர்தல் பல சமாதான மற்றும் மனித உரிமை அமைப்புக்களினால் அனுஷ்டிக்கப்பட்டது. கூடியளவு சிங்கள மக்களே பங்குபற்றியிருந்த இந்தக் கூட்ட்ங்களில் அனேகமாக சமகால அரசியல் நிலைமைகளே ஆராயப்பட்டன. பொதுவாக எல்லோரும் ஒரு வித சோர்வுடன்தான் பேசினர் என்று கூற வேண்டும். எவருமே, எதிர்காலத்தில் நாம் இது வராமல் தடுக்கலாம் என்று உறுதியோடு கூறவில்லை. அந்த அளவுக்கு எங்கள் நாட்டு நிலைமைகள் ஒரு வித நம்பிக்கையையும் அளிக்க முடியாத நிலையை எட்டி விட்டது. மகிந்த அரசாங்கத்தின் யுத்த முன்னெடுப்புக்களில் சிங்கள மக்கள் அவ்வகையில் ஊறி விட்டார்கள்.

இதற்குப் பல காரணங்கள் காட்டப்பட்டன. பொருளாதாரக் காரணிகள் இவற்றில் ஒன்று. வழமையான பொருளாதாரத் திட்டங்களை எடுத்துப் பார்த்தால், கிராமங்களுக்கு முதலீடுகள் செய்யப்படுவதில்லை. ஆனால் ஒரு யுத்தப் பொருளாதாரத்தின் மூலம் கிராமங்களுக்குக் கணிசமானளவு வருமானங்கள் சென்று சேர்கின்றன. இராணுவத்தில் கிராமத்தவர்கள் தான் அதிகளவில் சேருகிறார்கள் என்பதுடன், ஊர்காவற்படைகளும் சாதாரணமாக எண்ணிப் பார்க்க முடியாத வருமானத்தைக் கிராமியப் பொருளாதாரத்துக்கு அளிக்கிறது.

ஆனால் பொருளாதாரக் காரணிகளை விட பேச்சாளர்கள் எடுத்துக் காட்டிய சமூகக் காரணிகளே குறிப்பிடத்தக்கன. நகர்ப்புறங்களிலுள்ள ஓட்டோ ஓட்டுனர், பாடசாலை வான் ஓட்டுனர்கள் என்று இவ்வாறு பாதையோரங்களில் நீண்ட நேரமாகக் காத்திருக்கும் வகையினரை இராணுவமும் பொலீஸூம் தங்கள் உத்தியோகமற்ற படைகளாக செயற்படுத்திக் கொண்டு வருகின்றன. இதன் மூலம், சாதாரண ஓட்டோ ஓட்டுனராக இருக்கும் ஒருவன் ஒரு முக்கிய உளவாளியாக இந்த அரசினால் தரமுயர்த்தப்படுகின்றான். அவனுக்கு இதனால் ஒரு வித சுய மரியாதையும் தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தின் அங்கீகாரமும் கிடைக்கிறது.

சவாரிகளை ஏற்றிக் கொண்டு விட்டு உடனையே மொபைல் மூலம் தொடர்பு கொண்டு தகவல் சொல்லுகிறார்கள். பாதையில் கரிய நிறத்தினராகவும் தமிழரைப் போன்று நடையுடை பாவனை கொண்டவராயும், தமிழில் பேசுபவராயும், துர்திர்ஷ்டவசமாய் தான் போகும் வழியைத் தவற விட்டவராயும் இருக்கும் 'சந்தேகத்துக்கிடமான' நபர்களை உடனையே அருகிலுள்ள காவலரண்களில் பிடித்துக் கொடுத்து விடுகிறார்கள்.

இவர்கள் மட்டுமா? பஸ் கண்டக்டர்களும் தான். இப்பொழுது பாதுகாப்பு என்ற பெயரில் அவர்கள் பயணிகளை நோட்டம் விடலாம், அவர்கள் எந்த அளவு பார்சலைத் தாங்கள் வைத்திருக்கலாம் என்பதனைத் தீர்மானிக்கலாம். திடீரென இப்படியான சாதாரண மக்களெல்லோரும் தமிழ் மக்களைக் கண்காணிக்கும் அதிகாரம் படைத்ததன் மூலம் வலுவுணர்த்தப்பட்டிருக்கிறார்கள்!!! தாமும் அரசின் இயந்திரத்தில் ஒரு முக்கிய பங்காளியாக ஆக்கப்பட்டிருக்கின்றனர். இதன் காரணமாக, சமாதானம் வேண்டும் என்று யாராவது கோரிக்கை விடுத்தாலே போதும் அப்படிச் சொல்லுகிறவர்களை அடிக்கவும் துணிகிறார்கள்.

தேசிய சமாதானப் பேரவை அனுராதபுரத்தில் சமாதானக் கருத்தரங்கொன்றினை ஒரு விடுதியில் ஒழுங்கு செய்திருந்தது. விடுதிப் பணியாளர்கள் மூலம் கதை பரவி, சமாதானப் பேரவையினர் இடத்தில் போய் தங்கள் வாகனங்களுடன் இறங்கியதும் கையுமாக காடையர் கூட்டம் அவர்களையும் அவர்கள் வாகனத்தையும் அடிக்க வந்து விட்டதாம். உதவிக்கு வந்த பொலீஸூம் "தயவு செய்து இடத்தைக் காலி பண்ணுங்கள் இல்லாவிடில் எங்களுக்கு ஒழுங்கை நிலைநாட்ட முடியாது" என்று சொன்னாரே தவிர, குற்றம் செய்யும் நபர்களைப் பிடித்து உள்ளே தள்ள ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. விடுதலைப் புலிகள் ஒரு கூட்டமாக வந்திருந்தால் இப்படித்தானா சொல்லியிருப்பார்கள்? அவ்வளவு வேண்டாம்.

ஒரு சாதாரண தமிழ் பெண்ணோ ஆணோ சிறை அடைக்கப்படும் வீதத்தையும் இதனுடன் ஒப்பிட்டுத்தான் பார்க்கலாமா? இனவாதம் அவ்வளவு ஊறிவிட்டது.

அரசினால் பெரும்பான்மையினம் அடையும் சமூக வலுவூட்டல்கள் எம் கண் முன்னே அரங்கேறுகின்றது. வரலாறு தனக்கென்று ஒரு பாதையை வகுத்து, அதை நாங்கள் கட்டுப் படுத்த முடியாத அளவுக்குத் தான் போன போக்கில் போவது போல் இருக்கின்றது. ஆனால் விட முடியாது. இவ்வாறு தான் வகுத்துக் கொண்ட பாதையினின்றும் அதை திசை திருப்ப வேண்டும். எமக்கு வேறு வழியில்லை. அதை நாம் செய்தேயாக வேண்டும். நாம் ஒன்று சேர்ந்தால் செய்யலாம். நாம் ஒன்று சேர்ந்தால்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருநல் நினைவுகள்

கவிஞர் திமிலைத் துமிலன்

## "சரக்..டும்! சரக் ....டும்!"

**"பங்குனி மாதம் பனைமரமெல்லாம் பாளை பறிகின்றதா? சொல் மந்திரி" இது மட்டக்களப்பு நாட்டுக் கூத்து மெட்டில வாற ஒரு வடமோடிப் பாட்டு. எந்த நாடகத்தில் இந்தப் பாட்டு வருகுதெண்டு எனக்கு நெனைவில்ல. ஆனா, அன்டைய ஊர்ப் பொடியனுகள் பாடக் கேட்டிரிக்கன். வடக்கில 'கற்பக தரு' வெண்டாப் பனமரந்தான்.**



கிழக்கில அப்படிச் சொல்லாட்டியும், எங்கட ஊர்ப் பொடியன் பொட்டயளுக்கு, பனங்காப் பொறுக்க போறதெண்டா சரியான சோட்ட பங்கினில பாள பறியும், சித்திரை வையாசில நொங்கு குடிக்கிற வேட்டை அதுகும் களவாகப் பனமரங்களில ஏறி நடு மத்தியானத்தில் அந்த மரத்தடி நிணலுல இருந்து, நொங்கு குடிக்கிறதுதான் எத்தின சந்தோசம் நடுவில நொங்குக் குலைகளெல்லாக் கிடக்க, பொடியனுகளெல்லாம் வளைச்சிக் குந்தியிருந்து, வெட்டின நொங்குக் கண்ணில் பெருவெரல உட்டுக் கெழப்பி, வாயில வச்சி ஒதடுகளக் குமிச்சி "சொர், சொர்..." எண்டு உள்ளுக்கு இழுத்துக் குடிச்சா,அதுதான் சொர்க்கம்! அதுக்காக அந்த மத்தி யானத்து வேகா வெயிலுல பொடியனுகளெல்லாம், அம்மாமார் ஏச ஏச ஒருவருக்கும் தெரியாம, களவா கப் போவானுகள்.

எங்கட ஊருல பனமரம் கொஞ்சம் தான். ஆன வலையிறவில ஆயிரக் கணக்கில நிக்கும். அதுக்கும் வாரியருட வட்டைக்குள்ள கேக்க வேணாம். நாங்க திமிலதீவிலருந்து போட்டா வயிலுக்கால போய், வாரியருட குளத்துக் கட்டில ஏறினா, கடலெல்லாம் பனைமரம்தான். பெரிய வானடி மரங்கள், சின்னவானடி, அங்கால போனால் வாய்க்கால் கட்டுப்பனைகள், ஏத்தாலக் கட்டுப் பனைகள், புளியடிப்பனை, அதுக் கங்கால போனா புளியடி முனைப் பனைகள் ஆயிரக் கணக்கில ஆன எல்லாப் பனையிலயும் வெட்ட ஏலாது. மறைவாக நிக்கிற பனைகளிலதான் பொடியனுகள் கைவரிச காட்டுவானுகள். செல நேரம் வெட்டிக்குடிச்சிக் கொண்டிருக்ககுள்ள, வாரியரோ, மக்களோ வாறதக் கண்டா குலைகளையும் தூக்கித்து ஆத்தடிக் காட்டுக்குள்ள ஒரேயோட்டம். செலநேரம் சடுதியாக தூக்காமலே ஓடினா வந்தானுகள் எல்லாத்தையும் தூக்கித்துப் போயிடுவானுகள். தலயத் தடவித்து திரும்பி வரவேண்டியதுதான். ஆரும் வராட்டி வேட்டைதான். குடிகுடியெண்டு குடிச்சிப் போட்டு மிச்சக் குலைகள் மிச்சக் குலைகள் ஊட்டுக்கு கொண்டருவம். நொங்கு கொஞ்சம் முத்தலெண்டா எல்லாத்தையும் தோண்டி பனங் குடலைகளில கட்டித்துவருவம். இப்பிடி, கள்ள நொங்கு வேட்டை வரிசத்தில ஒருக்காத்தான் வரும். அதுக்குப் பிறகு ஆடிமாதம் புறந்தாப் போதும் பனங்கா வேட்டைதான்.

பனங்கா உழத்துவங்கினா, பொடியன பொட்டையளுக்கு நித்திரையே வராது. விடியச் சாமத்திலே எழும்பி ஒரே ஓட்டம் தான். எங்கட திமில தீவுத் திடலில ஒரு பனை நிண்டிச்சி. எங்கட ஊர்ப் பனைகளுல அதுதான் உயரம். அதுக்குப் பேர் பெரிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பனை. பேரைப் போல அதிட காயும் பெரிசிதான். கன்னங் கரே லெண்டு ஒரு மூண்டு கொத்தாக்கிற பானையளவு பெரிசி. சாயங் காலத் திலோ, கருக்கப் பொழுதுக்குள் ளையோ நடுச் சாமத்திலோ, விடி யச் சாமத்திலோ, எப்பண்டான் னப் பனங்கா உழலாம். ‘சரக்கும்’ எண்ட சத்தம் கேட்டாப் போதும், ஒவ் வொரு ஊட்டிலயுமிருந்து பொடியனுகள் கண் மண் தெரியாம ஓடுவானுகள். ஓடி முதலில எடுக்கிற வனுக்குத்தான் பனங்கா. ரெண்டு பேர் ஒண்டாகத் தொட்டானு களோ, சண்டைதான் அதுமட்டுமி ல்ல அடிபிடியும் நடக்கும். இதச் சொல்லக்குள்ள, நான் றெயினிங் கொலிச்சில படிச்ச பாட்டொண்டு நினைவு வருது. அது கனகி புராணப் பாட்டு.

தாலக்கனியொன் றினுக்காக
தரைமேல் மாந்தர் பலர் திரண்டு
வேல் கத்திகள் கொண்டெறிந்து மிக
விசயம் பொருதும் வள நாடன்...

தாலக் கனி - பனம் பழம் ஒரு பனம் பழத்துக்காக மனிசரெல்லாம், வேல்,கத்திகள் எல்லாம் கொண்டு சண்டை புடிச்சி, வெற்றிக்காகப் போர் செய்யிற வள நாடனாம் அந் தத் தலைவன்.

நல்ல நகைச்சுவை கலந்த பாட்டு.

பனங்கா பொறுக்கிற காலத்துல பொடியனுகளுக்கு நித்திரையே வராது. விடியச் சாமம் நாலு மணி க்கே எழும்பிடுவானுகள். பனங்கா பொறுக்கிக் கொண்டு போட்டுத் தான் பள்ளிக்குப் போற வேல.



அதிலயும் ஆர் அதிகம் பொறுக்கிறது எண்டதிலயும் போட்டி இருள் பிரிய முதல் மரத்துக்குக் கீழ பனங்கா கிடக்குதெண்டே தெரியாது. கையக் கொண்டு தடவிப் பாத்துத்தான் எடுப்பானுகள். சில நேரம் சாணிக் குமியிலுவில கையைக் கொண்டு புதச்சித்து உதறுறது கூட உண்டு. அது மட்டுமில்ல, ஆத்தோரத்துப் பனைக ளுக்குக் கீழே பனங்கா தடவியெடுக் கப் போய் அசிங்கமான அனுபவம் பெற்ற ஆக்களுமுண்டு. இருள் பிரிய முதலே, பனையளுக்குக் கீழே ஆரா வது குளத்தபோய் வச்சிரிப்பானு கள். இது தெரியாமப் போய் பனங் காய் தடவ கை வச்சி.. சீச்சீ,

சில நேரம் அந்த இருட்டு நேரத்துல உழுந்த பனங்காய மாடுகள் நிண்டு சூப்பிக் கொண்டிரிக்கும். சில பெடி யனுகள் அதக் கூட உடமாட்டானு கள். பறிச்செடுத்து பொட்டில அள்ளிக் கொண்டு வருவானுகள். இல்லாட்டி, பனங்கொட்டயள தும் போடு தும்ப முடிஞ்சி, குவியலாக கட்டித் தூக்கிக் கொண்டு வருவார் கள்.

நான் பனங்காய மாத்திரம் தான் எடுப்பன். மாடு கடிச்சிருந்தாக் கூட எடுக்கமாட்டன். பொறக்கப் பொற க்க பன ஈக்கில் கிழிச்சி பனங்கா மூளை எடந்து கோருத்து சோடி சோடியா ரெண்டு கையிலயும், தூக்க முடியாம, எடைக்கிடை வெச்சி வெச்சி தூக்கிக் கொண்டு வருவம். எதிர்பாத்தளவு பனங்கா கிடைக் காட்டி, ஊட்ட போகவே மனம் வராது. வாய்க்கால் கட்டிலயோ இல்லாட்டி பெரியவான் ககட்டி லயோ குந்தித் தவம் கிடப்பம். “கிட்டுணார்ந்த மூத்தி, அப்பனே முருகா, புள்ளயாரே, கெதியா உழவேணும் பள்ளிக்கு நேரமாகுது” எண்டு நேர்ந்து கொண்டேயிரிப்பம். “சரக்..டும்” எண்டு கேட்டாப் போதும் போட்டி போட்டுக் கொண்டு ஓட்டம்தான்!

இந்தச் “சரக்...டும்” எண்ட சத்தம் எங்களப் பயங்கர மாக ஏமாத்தின கதை யும் இரிக்கி. வெள்ள ண்ண மட்டுமில்ல சாயங்காலத்தி லயும் பன ங்கா பொற க்கப் போற து ண்டு. பின்னேரம்



அஞ்சி மணி மட்டில போனமெண்டா, பனங்கா கெடைக்காட்டி, இருட்டுப்பட்டு எழு எட்டு மணி வரையும் பனைகளுக்குப் பக்கத்தில் காத்துக் கிடப்பம். அப்படியொரு நாள் காத்துக் கெடந்தாப்ப பக்கத்துப் பனையில "சரக்...டும்" சத்தம் கேட்டிச்சி. ஓட்டமா ஓடிப்போய், பனையடியெல்லாம் தேடினா ஒண்டுமேயில்ல. ஒரு வேளை உருண்டு போய் தூரத்தில கிடக்குமே, வெகுதூரம் வளைச்சி வளைச்சித் தேடியும் ஒண்டுமே இல்ல அப்ப, "அடேய், இது பனங்காயில்லடா" எண்டான் மத்தப் பொடியன். "அப்ப, என்னடா?" எண்டன் நான், பதிலே சொல்லாமல், வாடா ஊட்ட போவம் எண்டவன், முதல் பொறக்கி வைச்சிருந்த பனங்காய கூட தூக்காம ஓட்டம் புடிச்சான். அப்பதான் எனக்கு நெஞ்சிக்க "திகில்" எண்டுது. ஓடக் காலத் தூக்கி வைச்சா ஓட முடி யல்ல, எப்படியோ ஒரு வழியா ஊட்ட வந்து சேந்தன். ஊட்டு கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியல்ல. அந்தச் "சரக்...டும்" பனங்காயில்லயாம், பேயாம். அதுக்குப்பிறகு இருட்டில் பனங்காய்க்கு தவம் கிடக்கிற வேலயை கை கழுவினம்.

மற்றொரு "சரக்..டும்" அனுபவம் எனக்கு இப்ப நினைவு வருது. அரிக்கன் லாம்பைக் கொழுத்திக் கொண்டு இருட்டின பிறகு ஒரு நாள் அப்பா இறால் குத்தப் புறப்பட்டார். நானும் வரட்டாப்பா? கேட்டன். சரியெண்டு இறால் பறிய என்னுட்டத்தந்தார். போய் புளியமுனை ஆறு வரைக்கும் இறால் குத்தித்து, ஆத்தோரத் தடத்தால திரும்பி வந்தம். சின்னவான் ஆத்தோரத்தில ஒரு உயரமான பனை நிக்குது எனக்கு நல்லாத் தெரியும். அது ஆண் பனை. அந்தப் பனையைக் கடந்து ஒரு ரெண்டு பாகம் வந்திரிப்பம், பின்னால "சரக்...டும்" எண்ட பனங்காய விழுயுறசத்தம்! "அப்பா, இது ஆண் பனை, எப்படிப் பனங்காய்? "எண்டு கேட்டு காலைக் கட்டிப் பிடிச்சிட்டன். அப்பா நிண்டு திரும்பி காறித் துப்பினார். "அதொண்டுமில்ல, நீ வா" எண்டு என்னக் கூட்டிட்டு வந்திட்டார். அவர் சொல்லாட்டியும் எனக்குத் தெரியும் அது பேய் தான்! இப்படிப் பேய் பற்றிய பல அனுபவங்கள் எனக்குக் கெடைச்சிது. பெரியவனான பிறகும் தான் அதெல்லாம் இப்ப வேணாம் புறகு பாப்பம்.

என்னதான் பேய்ப் பயமிருந்தாலும் இருள் பிரிய பனங்கா பொறக்கப் போற சோட்டை ஒருவருக்குமே போகல்ல.

ஒருநாள் வெள்ளன்ண பனங்காய் பொறக்கித்து, கெதியா ஊட்ட போகோணுமெண்டு, ஏதால ஆலயடியிலருந்து குளத்து வயலுக்கால தனியாக ஓட்டாமாக வந்து கொண்டிரிந்தன். எதிரில ஒரு வயல்கட்டு வந்துது. அதத் தாண்டி கால் தூக்கி வச்ச நான் திடுக்கிட்டுப் போய் கால் வைக்காம காலப் பின்னுக் கிழுத்துத்தன். பாத்தா எதிரில ஒரு பெரிய சிம்மாடு! சிம்மாடு போல வளையாம படுத்திருந்தது ஒரு பெரிய புடையன் பாம்பு, தூக்கின கால நான் வச்சிருந்தா எண்ட பாடு அண்டையோட சரி. திமிலைத் துமிலன் எண்ட ஒரு படைப்பாளி இருப்பே கிடைச்சிரிக்காது.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பூலான்தேவி 14

**சொந்தக் கிராமத்தில் சொந்த மனிதர்களுடன் சில மாதங்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் பூலான் வாழ்ந்தாள். இழந்த சக்தியை எல்லாம் அந்த வாழ்க்கை அவளுக்குத் திரும்பக் கொடுத்தது. வயல் வெளிகளில் மாடுகளை மேய்த்துக் கொண்டும் யமுனையில் குளித்துக் கும்மாளமிட்டுக் கொண்டும் பூலானது வாழ்க்கை மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது.**

# வேப்பமரத்தின் கீழ் ஒரு துர்க்கை

**மாயாதீனுக்கு** பூலான் கிராமத்துக்குத் திரும்ப வந்தது வயிற்றில் புளியைக் கரைத்தது. வயல் விடயமாக பூலான் மீண்டும் முரண்டு பிடிப்பாள் என அமைதியிழந்து தவித்தான். அவனது தூண்டுதலால் புட்டிலால் பூலானைத் தேடி அவர்களது கிராமத்துக்கு வந்து எல்லோரையும் திட்டிக் கொண்டும் காறி உமிழ்ந்து கொண்டும் பெரிய ரகளை செய்தான். ஆனால் பூலானது அம்மா மசிந்து விடவில்லை. பதிலுக்கு அவளும் அவனைத் திட்டித் தீர்த்தாள். ஏமாற்றத்துடனும் கோபத்துடனும் புட்டிலால் தனது புதிய சைக்கிளில் திரும்பிப் போனான். மாயாதீன் தேவிதீனிடம், திருமணமான பெண்ணுக்கு அப்பன் வீட்டில் என்ன வேலை? அவளை மரபு மரியாதைப்படி கணவன் வீட்டுக்கு அனுப்பிவிடு என அடிக்கடி கூற ஆரம்பித்தான்.

சில நாட்கள் கழிய ருக்மணி அங்கு வந்தாள். ருக்மணிக்கு பூலானுக்கு நிகழ்ந்த துன்பங்கள் எல்லாம் முழுமையாகத் தெரியாது. ருக்மணி வீட்டில் இருக்கும் தைரியத்தில் பூலானது அம்மா அவளுடைய சகோதரன் வீட்டுக்குப் போயிருந்தாள். அங்கு அவள் சில நாட்கள் தங்கியிருந்தாள். இந்தச் செய்தியை மாயாதீன் உடனடியாகவும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரகசியமாகவும் புட்டிலாலுக்கு அறிவித்தான். தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்த புட்டிலால் மீண்டும் தனது சைக்கிளில் அங்கே வந்தான். வழக்கம் போல பூலான் ஒளிந்து கொண்டாள். ஆனால் ருக்மணி அவளைத் தேடிக் கண்டு பிடித்து அவளுக்குப் புடவையும் முக்காடும் அணிவித்தாள். பூலான், நீ கணவனுக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்று உபதேசம் வேறு செய்ய ஆரம்பித்தாள் ருக்மணி. அப்போது தேவிதீனும் அங்கே வந்து சேர்ந்தார். அவர்கள் இருவருமாகச் சேர்ந்து புட்டிலால் இருக்கும் அறைக்குள் பூலானைத் தள்ளி விட்டனர்.

தேவிதீனும் ருக்மணியும் சேர்ந்து புட்டிலாலின் வீட்டுக்குச் சென்று அவனுடன் வாழ வேண்டுமென்று பூலானைக் கட்டாயப்படுத்த ஆரம்பித்தனர். அம்மாவைக் காணாது பூலான் தவித்தாள். அவள் இருந்தால் இப்படியெல்லாம் நடக்காது. பூலான் புட்டிலாலின் முன் நடுங்கிக் கொண்டே நின்றாள்.

ருக்மணியும் தேவி தீனுமாகச் சேர்ந்து அன்றிரவு படகுத் துறைக்குப் பூலானைக் கூட்டிச் சென்று புட்டிலாலுடன் அனுப்பி வைத்தனர். ஆனாலும் படகு மறு கரையை அடையும் சமயத்தில் பூலான் யமுனையில் குதித்து ஊரை நோக்கி நீந்தத் தொடங்கினாள். ஆனால் இராட்சத பலமுள்ள புட்டிலால் அவளை நாலே எட்டில் பிடித்து விட்டான். அவளை சைக்கிளின்



முன்புறம் உட்கார வைத்து இரண்டு கைகளுக்குமிடையில் பலமாக அழுத்திப் பிடித்தவாறே தனது ஊரை நோக்கி வேகமாக சைக்கிளைச் செலுத்தினான். வழி பூராகவும் பூலானைக் கெட்ட வார்த்தைகள் சொல்லி ஏசினான். இனி நீ ஏதாவது பிரச்சினை செய்தால் அல்லது வெளியில் யாரிடமாவது ஏதாவது சொன்னால் உன் பிணம் தான் என் வீட்டை விட்டு வெளியே போகும் என அச்சுறுத்தினான்.

வீட்டின் வெளியே பூலானது மாமனார் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தார். பூலான் அவரது கால்களில் ஓடிப் போய் வீழ்ந்து கெஞ்சினாள். அவர் 'நல்லபடியாக நடந்து கொள் பூலான் என்று மட்டுமே சொன்னார்.

கிழவர் தனது அறைக்குள் போனதும் புட்டிலால் பூலானை தனது தொல்லை மிகுந்த அறைக்குள் இழுத்துச் சென்றான். அவனை எதிர்த்து பூலானால் எதுவும் செய்ய முடியவில்லை. ஒவ்வொரு இரவும் பூலானுக்கு நரக வேதனை! இரவுகள் தந்த ஏமாற்றத்தையும் வெறுப்பையும் தணிக்க பகல் வேளைகளில் தோலுரிந்து இரத்தம் சொட்டும்வரை புட்டிலால் அவளைச் சாட்டையால் விளாசினான்.

இம்முறை அவளுக்குத் துணை செய்ய மாமனாரும் இல்லை. ஊராரும் இல்லை. அவள் புட்டிலாலுக்கு மனைவி. அவன் விரும்பியபடி அவளை நடாத்தலாம். நான்கைந்து குழந்தை களையாவது அவனுக்காகப் பெற்றுக் கொடுக்காமல் பூலான் அங்கிருந்து எங்கும் செல்ல முடியாது என்று கொக்கரித்தா அவன்.

பூலானுக்கு துர்க்காதேவியைத் தவிர வேறு புகழ் இல்லை. தனக்கு இழைத்த கொடுமை களுக்கெல்லாம் புட்டிலாலைப் பழி தீர்க்கத் தனக்குச் சக்தியையும் சந்தர்ப்பத்தையும் கொடுக்க வேண்டி துர்க்கையைப் பிரார்த்தித்தாள் அவள்.

துர்க்கையின் அருளோ என்னவோ? புட்டிலால் வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் அவளுடைய தாய் மாமன் தாராசந்த் தனது மகள் கல்லுவுடன் அங்கு வந்தான். பூலானது அம்மாவும் அத்தையும் அவர்களை அங்கு அனுப்பியிருந்தார்கள்.



எங்களுடன் வந்து விடு. நீ இங்கு படுபவையெல்லாம் எமக்குத் தெரியும். நாங்கள் உன்னை எங்கள் வீட்டுக்குக் கூட்டிப் போகிறோம் என்றார் மாமா. பூலானது துணிகளும் நகைகளும் மறுபடியும் பொட்டலமாகக் கட்டப்பட்டன. எவர் கண்ணிலும் படாமல் மூவரும் நழுவினர். இவ்வாறாக மீண்டும் புட்டிலாலின் பிடியிலிருந்து பூலான் தப்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் எல்லை தாண்டியதும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள்.

மாமாவுடனும் அத்தையுடனும் மைத்துனனுடனும் பூலான் சில நாட்கள் மகிழ்ச்சியாகக் கழித்தாள். அங்கு அவளுக்கு நல்ல உணவு கிடைத்தது. வேண்டுமான அளவு க்கு ஓய்வு கிடைத்தது.

ஒரு நாள் அவள் நல்ல பகல் தூக்கத்திலிருந்தாள். அப்போது அவளது அம்மா அங்கு வந்தாள். வெறுமே அவள் வரவில்லை. புட்டிலாலைப் பற்றிய ஒரு கெட்ட செய்தியோடு வந்தாள். பூலான் தூக்கத்திலிருந்து துடித்துப் பதைத்து எழுந்தாள்.

அவளது மாமாவும் மைத்துனனும் அவளை கடத்திக் கொண்டு வந்து விட்டதாக புட்டிலால் பொலீஸில் புகார் செய்திருக்கிறானாம். இனியும் பூலான் மாமா வீட்டில் தங்க முடியாது. அது அவருக்கு கெடுதலைத் தரும்.

அம்மாவுடன் தங்களது வீட்டை நோக்கி மீண்டும் பூலான் பயணித்தாள். சோட்டியும் புரியும் சிவநாராயணனும் பூலானைக் கண்ட மகிழ்ச்சியில் நடனமாடத் தொடங்கினர்.

மறுபடியும் அண்டை வீட்டாரும் ஊராரும் வந்தனர். புலானை புட்டிலாலுடன் திரும்ப அனுப்ப வேண்டாமென அவர்கள் தேவிதீனுக்கு ஆலோசனை சொன்னார்கள்.

ஆனாலும் புட்டிலால் இலகுவில் விட்டுவிடுவதாயில்லை.








# துளி..?

பஸ்ஸில் தொங்கிக்கொண்டு
போகும் பொழுதுதான்
புரிகிறது
ஏசுவின் சிலுவை ரணம்

நாகவாணிராஜா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலிக் கால நினைவுகள் 18



கே. எஸ். பாலச்சந்திரன்



எஸ். நடராஜா

வானொலியில் ஒலிபரப்பாகிய உரைச்சித்திரங்களை நான் எழுதியும் அவற்றில் பங்குபற்றியும் வரும் நாட்களில் அதன் தயாரிப்பாளராக எஸ். நடராஜாவும் அவரைத் தொடர்ந்து ஜெயபாலன், இரா.பத்மநாதன் போன்றோரும் பணியாற்றினார்கள். நம்பினால் நம்புங்கள்.. நான் பங்குபற்றிய முதலாவது இசைச்சித்திரத்தின் பெயர் சனீஸ்வரன். ஆனால் என்ன.. சனி பகவானின் அருள் நன்றாகவே இருந்தது. மாதத்தில் குறைந்தது 'இரண்டு உரைச்சித்திரங்களில் பங்குபற்றவரும்படி எஸ். நடராஜா ஒப்பந்தம் (Contract) அனுப்புவார். நாடகத்துக்கு கிடைக்கும் சன்மானத்தின் அளவு இவற்றுக்கும் கிடைக்கும். சாதாரண எழுதுவினைஞனான என் போன்றவர்களுக்கு இந்த மேலதிக வருமானம் அக்காலத்தில் மிகவும் உதவியாக இருந்தது. நடராஜா மிகவும் மென்மையான சுபாவமுடையவர். அவரது தயாரிப்பில் சித்திரங்களில் பங்குபற்றிவிட்டு போதிய கால அவகாசம் எதுவும் கொடுக்காமல் சன்மானத்தை எதிர்பார்த்துப் போய் மதியநேர இடைவேளையில் அவர் முன்னால் நிற்பேன். சீறிச்சினக்காமல் என்னோடு வந்து உரிய தொகையை பெற்றுத்தந்து அனுப்பி வைப்பார். தற்காலிகமாக அவர் சிலகாலம் வானொலி நாடகங்களைத் தயாரித்ததும் உண்டு. நானும் அவர் தயாரிப்பில் சில நாடகங்களில் நடித்திருக்கிறேன். காலப் போக்கில் நான் சற்று பிசியான கலைஞனாக வந்ததின்பின்னர் சித்திரங்களில் பங்குபற்றும் சந்தர்ப்பங்களும் குறைந்துபோயின. அவரைச் சந்திக்கும் வாய்ப்பும் அற்றுப் போனது. பலகாலத்தின் பின்னர் அவருக்கு நேர்ந்த துன்பமான முடிவு அறிந்து மிகவும் வேதனைப் பட்டேன்.

தென்னிந்திய சினிமாவில் ஒரு நடிகன் அல்லது ஒரு நடிகை சற்று பிரபல்யமானவுடன் தயாரிப்பாளர்கள் சூட்கேஸில் முற்பணத்துடன் அவர்கள் வீடுகளுக்கு படையெடுப்பார்கள் என்றும் அவர்களும் பார்த்துப்பாராமல் பணத்தில் குறியாக எல்லாப்படங்களிலும் நடிக்க சம்மதித்துவிடுவார்கள் என்றும் நாம் கேள்விப்படுவதுண்டு இல்லையா? இந்த அளவில் இல்லாவிட்டாலும் பொழுதுபோக்கிற்காக நாடகம் நடித்தகாலம் போய் அதுவே வருமானம் தரும் தொழில் ரீதியானதாக மாறும்பொழுது எங்களை நாடி வரும் எல்லா சந்தர்ப்பங்களையும் அள்ளிப்போட்டுக்கொள்ள நினைப்போம். இதற்கு நானும் விதிவிலக்காக இருக்கவில்லை.

இலங்கை வானொலியில் தேசிய சேவை நிகழ்ச்சிகளில் (நாடகம் சித்திரம் உட்பட) பங்குபற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்கள் மற்றச்சேவை நிகழ்ச்சிகளில் பங்குபற்றமுடியாது என்ற எழுதாத விதியொன்று இருந்ததாக முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன். குறிப்பிட்ட கலைஞர்களே எல்லா நிகழ்ச்சிகளையும் ஆக்கிரமிக்கக் கூடாதென்பது மாத்திரமல்ல ஏராளமான கலைஞர்கள் வானொலியோடு தொடர்புடையவர்களாக இருந்தார்கள் என்பதினாலும் தான் இந்தவிதி.

எங்களைப்போல வேறு வேலைகளை பார்த்துக்கொண்டும் சொந்தத் தொழில் செய்துகொண்டும் வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களைத்தவிர முழுக்க முழுக்க வானொலியிலிருந்து கிடைக்கும் சிறிய வருமானத்தை நம்பியிருந்த கலைஞர்களும் இருந்தார்கள்.

காலப்போக்கில் கலைஞர்கள் தொகையும் குறைந்துபோக மேற்குறித்த விதியும் தளர்த்தப்பட்டு தேசியசேவைக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் மற்றச்



வசி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளிலும் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டோம் என்றும் வர்த்தக சேவையில் தணியாத தாகம் உள்ளிட்ட பல தொடர்நாடகங்களில் நடித்தேன் என்றும் முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன்.

இவற்றைவிட வர்த்தகசேவையில் தைப்பொங்கல், தீபாவளி, புதுவருடம் போன்ற நாட்களில் வர்த்தக ஸ்தாபனங்கள் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்த முன்வருவார்கள். அந்நிகழ்ச்சிகளில் குட்டிநாடகங்கள் இருக்கும். அவற்றில் கொஞ்சம் பிரக்யாதி உள்ள கலைஞர்கள் நடிக்கவேண்டுமென்று அவர்கள் விருப்பமாக இருக்கும். அவற்றை கடைசிநேரத்தில்தான் ஒலிப்பதிவு செய்வதால் வானொலி நிலையத்தின் முன்



திருப்பங்கள் தொலைக்காட்சி நாடகத்தில்



கே. எஸ். பாலச்சந்திரன்

வாசலில் அறிவிப்பாளர்கள் விளம்பர ஏஜன்சிக்காரர்கள் யாராவது கலைஞர்கள் வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டு நிற்பார்கள். எங்களைக் கண்டவுடன் கொத்திக்கொண்டு போய்விடுவார்கள். பிறகென்ன.. எங்கள் காட்டில் மழைதான். (இந்தியாவில் புகழ்பெற்ற கிரிக்கெற் வீரர்கள் விளையாடிச் சம்பாதிப்பதைவிட விளம்பரங்களில் தோன்றி பணம் சம்பாதிப்பதைப்போல என்று வைத்துக் கொள்ளுங்களேன். ஒரு சிறிய வித்தியாசம். அவர்கள் கோடிகளில். நாங்கள் ரூபாக்களில்) இவற்றைவிட கிராமசேவை நாடகங்கள் (களத்துமேடு நாடகத் தொடர்) கல்விச்சேவை நிகழ்ச்சிகள் என்றெல்லாம் பங்குபற்றினேன். இந்நாட்களில் ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது. அப்போது மாதந்தோறும் இடம்பெறப்போகும் வானொலிநிகழ்ச்சிகளை முழு விபரங்களுடனும் தாங்கிவரும் வானொலி மஞ்சரி என்ற சஞ்சிகையை வானொலிநிலையத்தார் வெளியிட்டுவந்தார்கள். அதில் எழுத்தாளர்களின் பெயர் பங்குபற்றியவர்களின் பெயர்கள் என்பனவற்றோடு அவர்களின் புகைப்படங்களும் சிலவேளைகளில் பிரசுரிக்கப்படுவதுண்டு.

ஒருமுறை வானொலி மஞ்சரியில் இஸ்லாமிய சேவை நாடகமொன்றின் நடிகர்வரிசையில் என் பெயரும் போதாதற்கு எனது புகைப்படமும் அருகில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நிலையத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பெரிய பரபரப்பாகப்போய்விட்டது. அடப்பாவி.. இதைக் கூடவா விட்டு வைக்கவில்லை என்று நேரிலும். நான் இல்லாத இடத்திலும் பேசிக்கொண்டார்கள். அது தவறுதலாக நடந்தது என்று நான் சொல்லியும் பலர் நம்பவில்லை. அந்த நிகழ்ச்சி ஒலிபரப்பான பின்னர் நான் அதில் இல்லையென்று தெரிந்த பின்னர்தான் அந்தச் சர்ச்சை ஓய்ந்தது.

வாத்தியார் வீட்டில் கிராமத்துக் கனவுகள் தொடர்களுக்கு பிறகு நான் எழுதிய வானொலித் தொடரின் பெயர் புதியதோர் உலகம் செய்வோம். பொதுவான தலைப்பின் கீழ் தனித்தனி நாடகங் களாக அமைந்த இவற்றில் எட்டு நாடகங்களை நான் எழுதினேன். 1989 இல்



ஏ.எம்.சி. ஜெயஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபரப்பான இவற்றில் முதல் நாடகமான முதியோர் சொல் வார்த்தை எனக்கு சந்தோசத்தை தந்தது. காரணம் அப்போது 11 வயதான எனது மகன் வசி நடித்த முதல் வானொலி நாடகம் இது. தொடர்ந்து தொலைக்காட்சியில் பல நிகழ்ச்சிகளிலும் திருப்பங்கள் தொலைக்காட்சி நாடகத்திலும் நடித்தபோதிலும் அவன் நடித்த ஒரேயொரு வானொலி நாடகம் இது தான். இலங்கை வானொலியில் நான் இறுதியாக எழுதிய தொடர் நாடகம் விழுதுகள். ஜூன் 1991 இல் ஆரம்பமாகி டிசம்பர் 1991 வரை 25 அங்கங்கள் ஒலிபரப்பாகியது. சந்தர்ப்பவசத்தால் ஒருவர் மீது ஒருவர் கோபம் கொண்டவர்களாக மாறிவிட்ட அண்ணனுக்கும். கணவனுக்கும் இடையே திண்டாடிக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் கதை. அந்தப்பெண்ணாக ஆர்.சிவலோகநாயகியும் கணவனாக எஸ்.எஸ்.கணேசபிள்ளையும் அண்ணனாக நானும் நடித்தோம். இதரபாத்திரங்களில் ஏ.எம்.சி. ஜெயஜோதி, கே. ராமச்சந்திரன் போன்றோரும் நடித்தார்கள். உறவுகளுக்கிடையிலான உரையாடல்களை உணர்ச்சிபூர்வமாக படைக்கும் எனது உத்தி இந்த நாடகத்தில் சிறப்பாக கையாளப்பட்டதெனினும் நாடகம் பெருத்த வெற்றியைப் பெறவில்லை. இந்த நாடகத்தையும் எனது முந்திய தொடர்களைப் போலவே ஒலிநாடாவாக வெளியிட முற்பட்டேன். ஆனால் எனது வாழ்வில் ஏற்பட்ட எதிர்பாராத திருப்பங்கள் இந்த முயற்சியை கைவிடச்செய்தன. சிறுவயதிலிருந்தே விளையாட்டுத்துறையில் எனக்கு ஆர்வம் இருந்தது. அதன் தொடர்ச்சியாக நான் வேலை பார்க்கத் தொடங்கிய பின்னர் கிரிக்கெற், பாட்மின்டன், டென்னிஸ் ஹொக்கி, உதைபந்தாட்டம் என்பனவற்றை எனது திணைக்களத் திலும் வெளியிலும் விளையாடி வந்தேன்.

இலங்கை வானொலியில் விளையாட்டுத்துறைக்கான ஒரு சிறுபிரிவு இயங்கிவந்தது. 1991 இல் மார்கழி மாதத்தில் இலங்கையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடை பெற ஆயத்த மாகிய வேளை. அந்தப் போட்டிகளில் நேர்முக வர்ணனையாளர்களாக சிலரைத் தெரிவு செய்து பயிற்சி வழங்கப் போவதாக அறிவித்தார்கள். நானும் விண்ணப்பித்தேன். தெரிவு செய்யப்பட்டபின் என்னையும் பயிற்சி வகுப்புக்கு அழைத்தார்கள்.

(பயிற்சி இன்னும் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்கம்

## தஸ்லிமா வெளியேற்றம்

ராஜா



மத ரீதியான சம்பிரதாயங்களால் அழுத்தப்பட்டு, பாதிற்பிற்குள்ளான பெண்களின் துயரத்தை தனது எழுத்துக்களால் எடுத்தியம்பிய காரணத்திற்காக அச்சுறுத்தலுக்கும், தாக்குதலுக்கும் உள்ளாகியும் மனம் தளராமல் போராடிய ஒரு பெண்ணை தனது அரசியல் இலாபத்திற்காக கட்டாயப்படுத்தி வெளியேற்றி தீராத அவமானத்தை இந்தியாவிற்கு பெற்றுதந்துவிட்டது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு.



தஸ்லிமா

கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றின் அடையாளமாக சித்திரிக்கப்பட்ட இந்திய நாடு தன்னிடம் அடைக்கலமான தஸ்லிமா எனும் மானுட போராளியை நெருக்குதல் அளித்து துரத்தியதன் மூலம் தனது உண்மையான முகத்தை தெளிவாக உலகிற்கு காட்டியுள்ளது. இதுவரை மூடி மறைத்து மாற்றிக் காட்டப்பட்ட அந்த முகத்தின் உண்மை சொரூபம் இன்று அப்பட்டமாகத் தெரிந்துவிட்டது.

வங்கதேச அடிப்படைவாதிகளால் துரத்தப்பட்டதனால் கொல்கட்டா வந்த தஸ்லிமா அங்கும் மிரட்டல், துரத்தல், ஆர்ப்பாட்டம் காரணமாக மத்திய அரசின் பாதுகாப்பில் தலைநகர் டெல்லியில் தங்க வைக்கப்பட்டார். இதற்கிடையே ஆந்திரத் தலைநகர் ஹைதராபாத்தில் ஒரு செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிக்கொண்டிருந்த போது தாக்கப்பட்டார்.



இந்தியாவில் இருந்து தஸ்லி-மாவை வெளியேற்ற மத்திய அரசு முயற்சித்து வருவதாக செய்திகள் வந்தபோது அதனை அயலுறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் பிரணாப் முகர்ஜி வன்மையாக மறுத்தார். ஆனால் டெல்லியிலோ அல்லது மற்ற இடங்களிலோ எந்த ஒரு நிகழ்ச்சியிலும் தஸ்லிமா தென்படவில்லை.

இந்த நிலையில், நமது நாட்டை விட்டு வெளியேறி லண்டன் சென்ற தஸ்லிமா, தன்னை இந்தியாவை விட்டு வெளியேற்ற உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் இந்திய அரசு அழுத்தம் கொடுத்ததாகக் கூறியுள்ளார்.





"இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு உள ரீதியாக தொடர்ந்து அழுத்தம் கொடுத்தது இந்திய அரசு. நான் அதற்கு உடன்படவில்லை. இந்தியாவை விட்டு வெளியேறுவதில்லை என்று உறுதியாக இருந்தேன். என்னை உள ரீதியாக வீழ்த்த முடியாது என்று அறிந்து கொண்டவர்கள் உடல் ரீதியான தொல்லைகளைத் தரத் துவங்கினார்கள். அதில் வெற்றியும் பெற்றார்கள். எனவே வேறு வழியின்றி நாட்டை விட்டு வெளியேறினேன் என்று" தஸ்லிமா கூறியுள்ளார்.

"புது டெல்லியில் நான் தங்கவைக்கப்பட்ட இடம் பாது-காப்பானது என்று கூறினார்கள். அதனை நான் சித்திரைவதைக் கூடம் என்றே கூறுவேன். அது என்னை கொல்லும் இடம் என்பதையும் நான் அறிந்து கொண்டேன்" என்று தஸ்லிமா கூறியுள்ளது மேலும் அதிர்ச்சியளிக்கிறது.







இதுதான் இதனைத்தான் முழுச் சுதந்திரம் உடைய இந்தியாவாக பேசிக் கொள்கிறோம், காட்டிக்கொள்கிறோமா?

சிந்திப்பதற்கும், பேசுவதற்கும், நம்பிக்கைக்கும், வழிபாட்டிற்கும் முழுச்சுதந்திரத்தை தனது முகவுரையிலேயே உறுதியளிக்கும் அரசியலமைப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்திவரும் இந்திய நாட்டில் ஒரு பெண் எழுத்தாளரைக் கூட பாதுகாப்பாக வைத்திருக்கும் தகுதியில்லையா? அல்லது விரும்பவில்லையா? என்ன காரணம்? மத்திய அரசு விளக்கிட வேண்டும்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தனது அரசியல் லாபத்திற்காக இந்த நாட்டினுடைய மதச் சார்பற்ற கொள்கையை காற்றில் பறக்க விடுகிறதா?

மக்கள் கேள்வி கேட்பதில்லை. ஆனால் பதிலளிப்பார்கள். அவர்களின் வாக்குகள் பேசும்.


இந்தியாவின் கடைந்தெடுத்த அயோக்கியத்தனத்தை தோல் உரித்துக்காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REVENGE இசை நாடகம்

**அனுஷா**




**கடந்த இருபத்தைந்து வருடங்களாக எங்கள் நாட்டில் தமிழ் மக்களுக்கெதிராகத் தொடரும் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பல துறைகளுள் நாடகத் துறையும் ஒன்று. இலங்கையும் உலகமும் எங்கோ செல்ல நாங்கள் எங்கோ அதல பாதாளத்தில் நிற்கின்றோம்.**

**லயனல்** வென்ட் மண்டபத்தில் ஜூன் 18ந்த திகதி அரங்கேறிய Revenge இசை நாடகத்தைப் பார்க்கும்போது மனதில் தோன்றியது. குட்டிலா என்ற இசைக் கலைஞனின் கதையை (பாகம் 2) அவர்கள் நடித்திருந்தார்கள்.

பாதுகாப்பில்லாத பல வருட அனுபவம். வெள்ளவத்தையையும் கொட்டாஞ்சேனையையும் விட்டு வெளியே கொழும்பைப் பார்க்க நம்மவர்கள் தயங்குகின்றனர். வெளியே வந்து பழக்கமே இல்லாமல் போய்விட்டது. கிட்டத்தட்ட ஒரு ghetto வாழ்க்கைதான். இதனால் லயனல் வென்ட் டவர் மண்டபம் போன்ற அரங்குகளில் சமர்ப்பணம் ஆகும் ஏராளமான கலைப் படைப்புக்கள் எமக்குக் கிட்டாமலே போகின்றன. இந்த யுத்தம் இன்னும் பல வருடங்களுக்குத் தொடரத்தான் போகிறது. எங்கள் கெட்டோ (ghetto) வாழ்க்கையை இப்படித் தொடர்ந்து கொண்டே போகப்போகிறோமா என்பதை நாங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். சரி இனி Revenge நாடகத்துக்கு வருவோம்.

இந்தியாவின் பெனாரஸ் நகரத்தில் குட்டிலா முசிலா என்று இரு இசைக் கலைஞர்கள். இவர்கள் இருவரும் சாக்கிய தேவனுடன் இந்திரலோகத்துக்குச் செல்கின்றனர். அங்கு நடந்த இசைப்போட்டியில் குட்டிலா வெல்லுகின்றான். இந்திரசபையின் ஆஸ்தான கலைஞனாக நியமிக்கப்படுகின்றான். அவன் தன் காதலி அனுபமாவைக் கல்யாணமும் செய்து கொள்கின்றான்.

முசிலாவோ தனது தோல்வியால் மனமுடைந்து குட்டிலாவைப் பழி வாங்கும் எண்ணத்துடனேயே காலத்தைக் கழிக்கின்றான். அவனது எண்ணங்களுக்குத் தூபம் போடுகின்றது துஷ்டா என்னும் தீய சக்தி. அதைச் சாத்தான் என்றும் கூறலாம். குட்டிலாவின் மனைவி அனுபமாவைக் கவர்ந்து வர ஆலோசனை கூறுகின்றது துஷ்டா. குட்டிலா இன்னுமொரு இசைப்போட்டிக்கு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தால்தான் அனுபமாவைப் பார்க்கலாம் என்று முசிலா அறிவிக்கின்றான்.
பெனாரஸ் நகர மன்னன் பிரம்மதத்தனிடம் போய் முறையிடுகின்றான் குட்டிலா. மன்னனோ அவனது நிலையைப் பார்த்து எவ்வளவோ பரிதாபப்பட்டாலும் செய்வதொன்றுமில்லை முசிலாவுடன் போட்டிக்குப் போனால்தான் உண்டு என்று கையை விரித்து விடு




கின்றான். காட்டுக்கு ஓடிப்போய் சாக்கிய தேவனின் உதவியை நாடப் பார்க்கின்றான் குட்டிலா. அங்கு வந்த மந்திரி பண்டிதன் கடவுள் உதவி ஒன்றுமே இல்லாமல் குட்டிலா போட்டியில் வெல்ல முயற்சிக்க வேண்டும் என்று அறிவுரை சொல்கின்றான். வேறு வழியின்றி குட்டிலா போட்டிக்கு ஒருவரது உதவியுமின்றி செல்கின்றான்.
போட்டி நடக்கின்றது. குட்டிலா தன்னம்பிக்கை இழந்து தோல்வி காணப்போகும் தறுவாயில் சாக்கிய தேவன் தோன்றி குட்டிலாவை ஆசீர்வதிக்கின்றார். சபையோர் எல்லோரும் மண்டியிட்டு வணங்க குட்டிலா நல்லவன் என்பது ஊரெல்லாம் தெரிந்தது. குட்டிலா போட்டியில் வெல்கின்றான். உறுதியாக நின்ற அனுபமாவை அழைத்துச் செல்கின்றான்.
இராமாயணம், மகாபாரதம் போன்ற பெரும் இதிகாசங்களை வாசித்த பழக்கத்தில் ஓகே what is the message? (என்ன செய்தியைச் சொல்ல வருகிறீர்கள்) என்றுதான் கேட்கத் தோன்றியது. நல்லவர் பக்கம் என்றும் கடவுள் இருப்பார் எனவே யாரும் தமது தரத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லையென்றா சொல்ல வருகிறார்கள்? அல்லது நல்லவரை உலகம் அடையாளம் காணுவதற்கு கடவுள் அவர் பக்கத்தில் தோன்றினால்தான் உண்டு என்று சொல்ல வருகிறார்களா? குட்டிலா சிறந்த கலைஞன் என்றால் ஏன் இவ்வளவு பயப்பட வேண்டும்? ஏன் அவருடைய இவருடைய உதவியை நாடவேண்டும்? விளங்கவில்லை. நான் முன்பும்



கவனித்திருக்கிறேன் அடிப்படைக் கொள்கைகளில் சிங்களப் பாரம்பரியம் கொஞ்சம் பலவீனப்பட்டுத் தான் இருக்கின்றது.
ஆனால் நம்பினால் நம்புங்கள் எங்கள் தமிழ்க் கண்களைக் கொண்டு பார்க்கும்போது Revenge நாடகம் சமகாலத் தமிழர்களின் நிலையை அப்படியே படம் பிடித்த மாதிரி இருந்தது. பட்டப்பகலில் எல்லோருக்கும் தெரிய மூன்று குண்டர்களை அனுப்பி அனுபமாவைக் கடத்திக் கொண்டு வருகிறான் முசிலா. போட்டியில் வென்று காட்டு பார்ப்போம் என்று வேறு சவால் விடுகின்றான். பழக்கமான கதை போல இருக்கின்றதா? அவன் செய்தது தவறு என்று எல்லோருக்கும் தெரிந்திருந்தும் மன்னன் உட்பட எல்லோரும் ஒன்றும் செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள். இதுவும் எங்களுக்குப் பழகிப் போனதுதானே. தமிழ் மக்கள் நிலையில் நின்று இப்படி குட்டிலா தவித்துக் கொண்டு பயந்து பயந்து வேறு வழியில்லாமல் போட்டியில் கலந்து கொள்ள கடவுள்தான் கடைசியில் அவனைக் காப்பாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடவுள் வந்து ஏதும் அற்புதங்கள் நிகழ்த்தினால்தான் தமிழ் மக்கள் கோரிக்கைகளில் நியாயம் இருக்கின்றதை சிங்கள தேசம் ஏற்றுக் கொள்ளுமா?

நாடக இயக்குனர் ஜெரோ டி சில்வா அரங்கினை உபயோகித்த முறை அருமையாக இருந்தது. சட்டகங்கள் கட்டி அரங்கின் அகலத்தையும் ஆழத்தையும் காட்சி மற்றும் இடம் மாற்றங்களுக்கு லாவகமாக உபயோகித்தார். இந்த வகையில் ஒரே நேரத்தில் வேறு வேறு இடங்களிலும் தளங்களிலும் இடம் பெற்ற நிகழ்வுகளை நாம் பார்க்கக்கூடியதாக இருந்தது. காட்சிகளும் விறு விறென்று நம்மைக் கடந்தன. கலாசூரி திலியுப் கபடமுதலிகேயின் இசையோ தேவாமிர்தமாக இருந்தது. இதற்கென சேர்க்களிலும் பாடசாலைகளிலும் சிறந்த பாடகர்களாகத் திகழ்ந்தவர்களைத்தான் நடிகர்களாகத் தெரிவு செய்திருந்தார்கள். கண்ணுக்கும் காதுக்கும் மிக இனிமையான அனுபவத்தைக் கொடுத்த நாடகம் என்றுதான் கூற வேண்டும். கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் படித்த சட்டத்தரணி கணக்காளர் கட்டிட எஞ்சினியர் என்று நடிகர்கள் ஒவ்வொருவரும் பெரிய தொழில்களில் இருந்தவர்களாகவோ அல்லது உயர்தர மாணவர்களாகவோ இருந்தார்கள். very impressive. ஆகா எங்கள் தமிழ்க் கலைகளுக்கு இப்படி நேரம் ஒதுக்க எமது படித்த சமுதாயம் முன் வருமா?



# இன்னும் பயம் எனக்கு...!


PUBLIC LIBRARY JAFFNA.

தயவு செய்து எனை
தனிமையிலே
விட்டு விடு..

கசங்கிய இதயத்திலே
இன்னும்
உயிர்ப்போடு இருப்பது
எனது நினைவுகள் மட்டுமே

வலிகளை
காயாத காயங்களை
கீறல்களை
பழைய நினைவுகளை
என்று
எல்லாவற்றையும் உரசிப் பார்க்கவே
துணைக்கழைக்கிறேன்
தனிமையினை

ஏனெனில்
உன்னிடம் என் கடந்த காலங்களை
சொல்வேனே ஆயின்
எனை நீ
மனநல மருத்துவ மனைக்கு
அனுப்பி விடுவாயோ
என்ற பயம் எனக்கு..?



**மட்டுவில் ஞானக்குமாரன்**
**ஜேர்மனி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த பக்கங்கள்...

மயில்வாகனம் சர்வானந்தா



## வீணை பாலச்சந்தர்

**ராவண தர்பாரில் ஆறுவயதுச் சிறுவன் ஒருவன் கஞ்சிரா வாசித்தான். அந்தச் சிறுவன் தான் எஸ். பாலச்சந்தர்**

டைரக்டர் வி. சாந்தாரம் 'சீதா கல்யாணம்' படத்தை தமிழில் தயாரிக்க விரும்பி கலைஞர்களைத் தேடிக்கொண்டிருந்த நேரம். சென்னை சங்கீத அக்கடமியினர் 1931ஆம் ஆண்டு நடத்திய போட்டியில் மாஸ்டர் ராஜமும், ஜெயாவும் வெற்றி பெற்றிருந்தனர். மாஸ்டர் ராஜத்தை சீதா கல்யாணம் படத்தில் நடிக்கச் செய்ய விரும்பி பிரபாத் ரோக்கீஸ் ஜெயந்திலாலும், சென்னை றினைசன்ஸ் சபை சேசரிகிரியும் அணுகினார்கள். மாஸ்டர் ராஜத்தின் அப்பா மயிலாப்பூர் வக்கீல் வி. சுந்தரம்ஐயர் அப்போது தனது குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் நடிப்பதற்கு வாய்ப்புக் கொடுத்தால், தன் மகனை நடிக்க அனுமதிப்பதாக ஐயர் நிபந்தனை விதித்தார். அவரது நிபந்தனைக்கு இணங்க வாய்ப்பும் வழங்கப் பட்டது. 1933ஆம் ஆண்டு வெளிவந்த சீதா கல்யாணம் படத்தில் மயிலாப் பூர் சுந்தரம் ஐயர் ஜனகர் வேடத்தில் நடித்தார். மகன் மாஸ்டர் ராஜம் ஸ்ரீராமன் , மூத்த பெண் ஜெயா சீதை, இளையபெண் சரசா ஊர்மிளா மொத்தத்தில் இது ஒரு குடும்பப் படமானது. அந்தக் குடும்பப் படத்தில்,ராவணனின் தர்பாரில் ஆறவயதுச் சிறுவன் ஒருவன் கஞ்சிரா வாசித்தான். அந்தச் சிறுவன் தான் எஸ். பாலச்சந்தர். இவர் தான் மயிலாப்பூர் வக்கீல் சுந்தரம் ஐயரின் இளைய மகன். கஞ்சிரா தவிர தபேலா, ஹார்மோனியம், சிதார் போன்ற வாத்தியங்களையும் வாசிப்பதில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். இதை விட சாரங்கி, மிருதங்கம், பிடில் போன்றவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவற்றையெல்லாம் விட பாட்டுப் பாடுவதிலும் ஆர்வமும் திறமையும் இருந்தது. மிகப்பெரிய ஆச்சரியம் என்னவென்றால் இத்தனையையும் குரு இல்லாமல் தானே கற்றுக் கொண்டார் என்பதுதான். சினிமாவைவிட்டு மாஸ்டர் ராஜம் சங்கீதக் கச்சேரிகளை நடத்தத் தொடங்கி, இந்தியாவின் முக்கிய நகரங்களுக்கும், இலங்கைக்கும் இசைப்பயணம் மேற்கொண்ட போது தபேலா வாசிப்பதற்கு பாலச்சந்தரும் சென்றார். இசைப்பயணம் முடித்து சென்னைக்குத் திரும்பிய பதினாறு வயது பாலச்சந்தரை சினிமா உலகம் அழைத்தது. பேபி சரோஜா வின் சினேகிதனாக 1941 இல் வெளிவந்த காமதேனுவில் நடித் தார். அதனைத் தொடர்ந்து 1941 இல் வெளிவந்த ரிஸ்ய சிருங்கர் படத் திலும் நடித் தார். இதில் இவர் பாடிய பாடல்களுக்கு இசையும் அமைத் தார். 1942 இல் ஆராய்ச்சி மணி படத்தில் விடங்கன் பாத்திரமேற்று நடித்தார். மனுநீதிச் சோழனின் மகன் விடங்கன் குருகுல வாசம் முடித்து இளமைப் பருவமெய்தி அரண்மனைக்குத் திரும்புகிறான். இளைஞன் விடங்கனாக பாலச்சந்தரும், அவரின்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காதலியாக கலாவல்லி பாத்திரத்தில் எஸ் வரலட்சுமியும் நடித்தனர். ஆராய்ச்சி மணி படத்தில் நடித்ததோடு அதன் இசையமைப்பாளர் ஸ்ரீனிவாசராவ் சித்தேயின் உதவியாளராகவும் பணி யாற்றினார். சங்கீதம், சினிமா, சதுர ங்கம் இவற்றில் இருந்த ஆசை படிப் பில் இருக்கவில்லை, பத்தாவது வகுப்போடு படிப்பை நிறுத்திக் கொண்டார். வானொலியில் சங்கீ தத்துறையில் மூன்று ஆண்டுகள் பணியாற்றி முடித்த கையோடு ஜெமினி ஸ்ருடியோவிற்கு வந்தார். இசைத்துறையில் அங்கு ஆறுமாத பங்களிப்பு; இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு ரோக்கீஸ் துளசிதாஸ் படத்திற்கு இசையமைத்தார். இசை யின் நளினத்தோடும், மென்மை யோடும் கலைப்பயணத்தைத் தொடங்கிய எஸ்.பாலச்சந்தர் திகில் கதை சொல்வதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். 1948 இல் 'இது நிஜமா'? படம் உருவானது இதில் கதை , உதவி டைரக்டர், பாடல்களுக்கு இசை, மாது, கோபால் என இருவேடம் இவை அனைத்தையும் எஸ் பாலச்சந்தர் ஏற்றார்.

தேவகி, ராணி,ராஜம்பாள், என்பன இவர் நடித்து 1951 இல் வெளிவந்தன. ராஜாம்பாள் படத்திற்கு இசையமைத்தார், இதனைத் தொடர்ந்து இவரது டைரக்சனின் வெளிவந்தது 'கைதி'. 1953 இல் ஏ.வி. மெய்யப்பச் செட்டியார் ஜப்பான் சென்றிருந்தார். அங்கு அவர் பார்த்த ஒரு திரைப் படம் மனதைக் கவர்ந்தது. இதைப்போல் ஒரு படம் எடுத்தால் எப்படி இருக்கும் என நினைத்தார், இந்தியா திரும்பியதுமே பாலச்சந்தரிடம் இது பற்றிக் கூறினார். அவர் விருப்பத்தின் பேரில் உருவான படம் தான்'அந்த நாள்' இந்தப் படத்தின் கதாசிரியர் ஜாவர்சீத்தாராமன்,மெய்யப்பச் செட்டியாரின் விருப்பத்தின் பேரில் உருவான அந்த நாள் படத்தின் டைரக்டர் வீணை எ.ஸ்பாலச்சந்தர். தேசத்துரோகம் செய்யும் விஞ்ஞானியான கணவ னை மனைவியே கொலை செய்யும் கதை, கொலையாளியையும்,கொலைக்கான காரணத்தையும் கண்டு பிடிப்பதுதான் திரைக்கதை. நடனம் பாடல் இல்லாமல் வெளிவந்த முதல் படம் 'அந்த நாள்' மெய்யப்பச் செட்டியாரின் விருப்பம் போலவே வீணை பாலச்சந்தருக்கும் ஓர் ஆசை இருந்தது. 1970 இல் 'நடு இரவில்' வெளிவந்த போது எஸ். பாலச்சந்தர் இவ்வாறு கூறியிருந்தார்."எனக்கு ஏழு வயதிருக்கும் ஓர் ஆங்கிலப் படம் வெளிவந்திருந்தது. அதைப் பார்த்த என் மனதின் அடித்தளத்தில் மையக் கருத்து அப்ப டியே பதிந்துவிட்டது. நாளாக ஆக என் வயதுடன் அந்தக் கருத்தும் வளர்ந்து கொண்டே இருந்தது."ஒரு கோடீஸ்வரர் தனது மனைவியுடன் தீவிலுள்ள மாளிகையில் வாழ்ந்து வருகிறார். கோடீஸ்வரர் திடீரென மரணப்படுக்கையில் விழுகிறார். இந்த வேளை அவரது உறவினர்களை தீவு வரவழைக்கிறார் கோடீஸ்வரருக்கு மருத்துவம் பார்க்கும் டாக்டர். தீவுக்கு வந்த உறவினர்கள் ஒவ்வொருவராக மர்மமான முறையில் நடு இரவில் கொல்லப் படுகின்றனர்.


ஏ.வி. மெய்யப்பச் செட்டியார்

வீணை நரம்புகளை மீட்டி இசை இரசிகர்களை மெய் மறக்கச் செய்த பாலச்சந்தர் சினிமா ரசிகர்களின் ரத்த நாளங்களை நடு இரவில் மூலம் உறையச் செய்தார்.

1962 இல் இவரது தயாரிப்பில் வந்தது "அவனா இவன்?" 1964 இல் பொம்மை படம் வெளி வந்தது. ஒரு பொம்மைக்குள் குண்டு ஒன்றை வைத்து அந்த பொம்மை இடத்துக்கு இடம் நகர்த்தப்படுகின்றது. அது


K.J.ஜேசுதாஸ்

எப்போது வெடிக்கும் என்ற திகிலை படம் முழுவதும் பரவ விட்டார் பாலச்சந்தர். இந்தப் படத்திற்கு இவர் இசை அமைத்தார். நீயும் பொம்மை நானும் பொம்மை நினைத்துப்பார்த்தால் எல்லாம் பொம்மை பாடல் இன்றும் எல்லோர் நினைவிலும் இருக்கிறது. **K.J.**ஜேசுதாஸ் தமிழில் பாடிய முதல் பாடல் பாலச்சந்தரின் படத்தில் இடம்பெற்றது. 1970 இல் இவரது இறுதித் தயாரிப்பான நடு இரவில் வெளிவந்தது.

கடைசி நாட்கள் வரை வீணையுடன் தான் வாழ்க்கை நடத்திய பாலச்

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர் வீணை வடிவிலேயே கையெழுத்தும் போட்டார். வீணை வாசிப்பில் பாலச்சந்தர் பாணி என்ற புதுமை பிறந்தது. கர்நாடக இசை தொடர்பான ஆக்கபூர்வமான சர்ச்சைகளைக் கிளப்பியதோடு அதன் விளைவாக எழுந்த கண்டனக் கணைகளையும் தனிமனிதனாக எதிர்கொண்டார்.



சந்திரபாபு

உலக அளவில் வெளி வரும் சிறப்பான திரைப்படங்களிலுள்ள புதுமையான உத்திகளை தமிழ்த் திரைப் படங்களில் பொருத்தமான முறையில் அறிமுகப்படுத்தியவர் வீணை எஸ். பாலச்சந்தர்.

ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்த "பெண்" திரைப்படத்தில் கதா நாயகனின் தோழனாக, நகைச் சுவைப் கதாபாத்திரத்தில் நடித்தார். அதில்.

கல்யாணம்....வேண்டும் வாழ்வில்
கல்யாணம்...
உல்லாசமாகவே உலகத்தில்
வாழவே
கல்யாணம் வேண்டும் கல்யாணம்..

என்ற பாடலைப் பாலச்சந்தரையே பாடச்சொன்னார் செட்டியார். "இது காமெடிப் பாடல். இதை சந்திரபாபு பாடினால் என்னை விடப் பொருத்தமாக இருக்கும்." என்று கூறி அவரையே பாட வைத்தார். பாலச்சந்தரின் வார்த்தைகள் நிஜமாகின. சந்திரபாபு பாடிய அந்தப் பாடல், பெரிய அள்வில் பிரபலமானது.



## வாழ்க்கைக் குறிப்பு

- முழுப் பெயர் - சுந்தரம் ஐயர் பாலச்சந்தர்
- அப்பா பெயர் - டி.வி.சுந்தரம்
- அம்மா பெயர் - பார்வதி (செல்லம்மாள்)
- பிறந்த தேதி - 18.01.1927
- மனைவி பெயர் - சாந்தா
- மகன் - எஸ்.பி.எஸ்.ராமன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேடிப் பகிர்தல்

என். சிறிரஞ்சன்

# பயண நேரம் பயனுள்ள நேரம்









எமது வாழ்க்கையில் கணிசமானளவு நேரத்தினை பிரயாணம் செய்வதில் செலவு செய்கின்றோம். ஒருவர் வருடமொன்றிற்கு 500 தொடக்கம் 1000 மணித்தியாலங்கள் வரை பிரயாணம் செய்வதில் செலவிடுகிறார் என்று ஒரு கணிப்பீடு கூறுகின்றது. நம்மில் பெரும்பாலானவர்களைப் பொறுத்தவரை இந்த நேரம் வெறுமனே வீணடிக்கப்படும் நேரமாகவே போய் விடுகின்றது. பிரயாண நேரத்தினைப் பிரயோசனமாகப் பயன்படுத்த பல வழிகள் உள்ளன. சிலர் பிரயாணம் செய்யும் போது நித்திரை கொ.ள்வதுண்டு. பிரயாணத்தின் போது நித்திரை கொள்வதும் ஒரு பயனுள்ள விடயம் தான். ஏனெனில் இன்றைய விரைவு வாழ்க்கையில் பலர் போதியளவு நித்திரையின்றி தவிக்கின்றனர். பிரயாணம் செய்யும் நேரத்தில் நித்திரை கொள்ள முடியாதவர்கள் புத்தகம் மற்றும் சஞ்சிகைகளினை வாசிக்கலாம். பிரயாணத்தின் போது வாசிக்கும் பழக்கம் நம்மிடையே குறைவாகும். ஆசனத்தில் இருந்து கொண்டு பிரயாணம் செய்யும்



போது மட்டுமன்றி நின்று கொண்டு பயணிக்கும் போது கூட வாசிக்கும் பழக்கத்தினை மேலைத்தேய நாட்டவர்களில் பலர் கொண்டுள்ளனர். நாமும் பிரயாணத்தின் போது வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வாசிக்கும் விடயம் வெறும் பொழுது போக்கு விடயமாகவன்றி எமது வாழ்வு மேம்பாட்டுக்கு உதவுவதாக அமையும் போது எமது பிரயாண நேரம் மேலும் பயனுள்ளதாக அமையும்.

பொதுப் போக்குவரத்து வசதியினைப் பயன்படுத்துபவர்கள் வாசித்துக் கொண்டு பயணம் செய்யலாம் ஆனால் எமது சொந்த வாகனத்தில் அதனை ஓட்டிக் கொண்டு பிரயாணம் செய்யும் நாம் என்ன செய்வது என்று கேட்கிறீர்களா? இருக்கவே இருக்கின்றன ஒலிப் புத்தகங்கள் (Audio Books). ஒலிப் புத்தகங்கள் எனப்படுபவை இறுவெட்டு ஒலி நாடா போன்றவற்றில் ஒலி வடிவில் வெளிவந்துள்ள புத்தகங்களாகும். ஆங்கிலத்தில் ஏராளமான ஒலிப்புத்தகங்கள் வெளிவந்துள்ளன. தமிழிலும் அண்மைக்காலமாக ஒலிப்புத்தகங்கள் வெளிவரத்தொடங்கியுள்ளன.

பிரயாணத்தின் போது வாசிப்பதில் பிரச்சினையுள்ளவர்கள் பிராணாயாமம், சில வகையான தியானம், உடற்பயிற்சி போன்றவற்றினைச் செய்யலாம்.

பிரயாணத்தின் போது எம்முடன் எடுத்துச் செல்லும் ஆவணங்கள் கையடக்கத் தொலைபேசி, கணினி (Lap Top , Plam Top) போன்றவற்றின் உதவியுடன் எமது அலுவலக மற்றும் சொந்த வேலைகளையும் மேற்கொள்ள முடியும். சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யு பிரயாணத்தின் போது




குறிப்பாக விமானப் பயணத் தின் போது தம்முடன் தனது அலுவலக ஆவணங்களை எடுத்துச்சென்று அவற்றினைப் படித்து கையொப்பமிடுதல் மற்றும் அவை தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அறிவுறுத்தல்கள் என்பவற்றினை வழங்குவது வழக்கம்.


இவற்றினைத் தவிரவும் மிகவும் பிரயோசனமான முறையிலும் நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாண நேரத்தினைச் செலவிட முடியும். அது வேறு ஒன்றுமல்ல சிந்தனை செய்வதுதான். சிந்தனையே எல்லாச் செயற்பாடுகளிற்கும் அடிப்படையானது. உலகளாவிய ரீதியில் பிரசித்திபெற்ற புத்தாக்கங்கள், புத்தகங்கள், கலை வடிவங்கள் போன்றவை பல பிரயாணத்தின் போது மேற்கொண்ட சிந்தனைகளின் போது தோன்றியவை. உலகளாவிய ரீதியில் பல சிறுவர்களின் மனதினை மட்டுமன்றி வளர்ந்தவர்கள் பலரது மனதினையும் கொள்ளை கொண்டு பல நூறு கோடி பணம் சம்பாதிக்கக் காரணமான மிக்கி மவுஸ் ஆனது வோல்ற் டிஸ்னி நிறுவனத்தின் ஸ்தாபகரான வோல்ற் டிஸ்னியினால் அவர் ரயிலில் பயணம் செய்யும் போது வரையப்பட்டதாகும்.

நாமும் பயண நேரத்தினை பயனுள்ள நேரமாகப் பயன்படுத்திக் கொள்ளப் பழகுவோம்.



வோல்ற் டிஸ்னி



பெண் சுமாராத்தான் பாடுவா..

பையனும் சுமாராத்தான் சமைப்பான்

சரி கல்யாணம் எப்ப வைச்சுக்கலாம்?

# யமன் மூலை

# பனையடிப்பக்கம்

வாடைக் காத்தடிக்க
வாழையிலை கிழிஞ்சதுபோல் - என்ட
வண்ணாத்திப்பூச்சி மனசு
வரிவரியாய் கிழிஞ்சுபோச்சு

வீடெல்லாம் அடிச்சுடைச்சு
விழிநீர்ப் புகையடிச்சு
ஆருக்கும் காட்டவெண்டு - இந்த
ஆக்கினையைச் செய்யினமோ


ஆராரோப் பாட்டுமுதல்
ஒப்பாரி ஓலம்வரை
ஆண்டாண்டுகாலமாய்
ஊரெண்டு எண்ணித்தானே
உறவாடி நாமிருந்தம்

போரொண்டால் பேரெடுத்த
போக்கிரிகள் முடிவெடுத்து
வேரறுத்து எங்களை
விரட்டி அடிக்கையிலே - எங்கட
பாராளுமன்றத்தினர்
பதுங்கி எங்கிருந்தார்..!

நீதியை ஆள்பவர்கள்
ஆணையொண்டை அனுப்பிவைக்க
பாவம் அது
பசிக்களையில் படுத்துறங்கி - முழிச்சு
மூச்சிரைக்க ஓடிவந்தும்
முடியவில்லை நிறுத்த
முடிஞ்சது முடிஞ்சதுதான்
யமன் மூலை ஆசிரியர்கள்
கூடிப்பேசும் நாட்களுக்காய்
ஓடியோடி நாட்டை
தேடி...மூடி...
மினுக்குகையில் - எங்கட
உயிரெடுத்துப் போகவெண்டு
கயிறுகொண்டு வந்தவர் யார்...!

படிக்கப்போகும் அவசரத்தில்
பாய்போட மறந்து
படுக்கவிட்ட பாவைப்பிள்ளை
தூக்கி எறிபட்டு
துகில் கலைந்துகிடக்கிறதை
பார்க்க மனமில்லை
வாங்க வாப்பா வெளிக்கிடுங்க.!

- பனையடிப்பாடகன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயோ!

## தொலைச்சிட்டன்..



**"ஐயோ! தொலைச்சிட்டனா? வீடு முழுக்க தேடிட்டனே! இப்ப என்ன செய்யிறது? வீட்டில யாரிட்டையாவது சொல்லுவமா? வேண்டாம்! வேண்டாம்! "இதைக் கூட உன்னால கவனமாக வைச்சிருக்க முடியாதா? கொஞ்சம் கூட உனக்கு பொறுப்பில்லை! ஆள் வளர்ந்தளவுக்கு உனக்கு அறிவு வளரலை!" என்று தொடங்கி முடிக்க திட்டியிட்டே இருப்பாங்க. அப்ப வேறு என்ன செய்ய முடியும். இன்னொரு தடவை தேடிப் பார்க்கலாம்." மீண்டும் தேடத் தொடங்குகிறேன்**

**என்** மனமே அமைதியற்று கொந்தளிக்கிறது. வரப் போவது சுனாமியா? தெரியவில்லை. "உயிரை விட மேலானதை எப்படி தொலைப்ப? இது இல்லாம நிம்மதியாக வாழ முடியுமா? ஒரே ஒரு நாள் இல்லாட்டா கூட அந்த நாள் சூனியமாயிடும். இதைப் போய் கவனமில்லாம தொலைச்சிட்டேனே! நாளைக்கு எப்படி வேலைக்கு போறது? நாளையென்ன மண்ணாங்கட்டி நாளை! இன்று இரவு என்னால நிம்மதியா தூங்கத் தான் முடியுமா?" என்னை நானே நொந்து கொண்டு மீண்டும் ஒரு தடவை தேடி முடித்து விட்டேன்.

"பாழாய்ப்போனது! எங்கு தேடியும் கிடைக்கலையே!" அடுத்த கட்ட நடவடிக்கையாய், தகவலை மெதுவாக அம்மாவிடம் தெரிவித்தேன்.

"அடிப் பாவி ! இதைக் கூடவா பொறுப்பில்லாம தொலைப்பா? என்ன பிள்ளடி நீ? உன்னை பெத்ததுக்கு அம்மியை பெத்திருக்கலாம். எல்லாம் அப்பா குடுக்கிற செல்லம்! ஐயோ! இப்ப என்ன செய்யிறது? யாருக்காவது தெரிஞ்சா எவ்வளவு பிரச்சினை வரப்போகுதோ? திரும்ப ஒண்டு எடுக்க எவ்வளவு பாடு படணுமோ? பொறுப்பில்லாத பிள்ளையாக வந்திட்டியே!"

அம்மா எல்லாரையும் கூட்டி விட்டாள். என் குடும்பம் முழுவதுமே ஒரே இடத்தில் என்னைச் சுற்றிக் கூடி விட்டது. ஒவ்வொருத்தராய் என்னிடம் கேள்வி கேட்க

எம்.தயானி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்குகிறார்கள். "எப்ப தொலைஞ்சுது?" "தெரியல்லை", "எப்படி தெரியும்" "நாளைக்கு வேலைக்குப் போறத்துக்கு எல்லாமிருக்கோ எண்டு 'செக்' பண்ணப்ப இது இருக்கலை", "நீ எல்லா இடமும் வடிவா பார்த்திட்டியா?" "ஓ" "வா இன்னொரு தடவை பார்ப்பம்" மறுபடியும் குடும்பத்தோடு சேர்ந்து ஒரு தடவை தேடுகிறேன்.

எல்லோருமே என்னை திட்டுவது என் காதில் கேட்டபடியே இருக்கிறது. இரவு பதினொரு மணியாகிவிட்டது. மூன்றாவது தேடலும் முடிந்துவிட்டது. மீண்டும் ஒரு கேள்வி, "கடைசியாக எப்ப அதைப் பார்த்தா?" "ம்....ம்... ஞாபகமில்லை", நல்லா யோசிச்சு சொல்லு ? " "ம்....ம்.. போன வெள்ளிக் கிழமை ஒவிஸில இருந்து பாங் போயிட்டு வந்து ஒவிஸ் லாச்சிக்குள்ள வைச்சன். அதுக்கு பிறகு .." எனக்கு உண்மையிலே அதன் பிறகு ஞாபகமில்லை. "அப்ப இரண்டு நாளா நீ கவனமில்லாம இருந்திருக்க அங்க தான் இருக்கும். போய்ப்பாரு" ஒரு மாதிரியா இடம் ஓரளவுக்கு கண்டு பிடித்தாயிற்று.

ஆனாலும் முழு நிம்மதி இல்லையே. தூக்கம் வராமலே புரண்டு புரண்டு படுத்து விடிய முன்பே எழுந்து குளித்து தயாராய் விட்டேன். "இப்ப நான் போகவா?" "கொஞ்சம் பொறு! சன நடமாட்டம் கொஞ்சம் கூடினால் போகலாம்! " "சரி" " போய்ப்பாரு! கிடைச்சா கோல் பண்ணி சொல்லு! கிடைக்கலன்னாலும் கோல் பண்ணி சொல்லு! அப்பாவை அனுப்பிறன். லீவு போட்டிட்டு பொலிஸுக்கு போய் கம்பிளைன் பண்ணிட்டு புதுசா ஒன்று எடுக்கிற வேலையை பாரு!" "எனக்கு உண்மையிலேயே பொறுப்பில்லைத்தான். இதுவரை நகை, பணம், செல்போன் 2 எண்டு எத்தனையைச் தொலைச்சிட்டன். ஆனா..அம்மா இந்தளவுக்கு என் மேல கோபப்பட்டதில்ல! ஏன்? ஒரு வார்த்தை திட்டியது கூட இல்லை" நினைக்க நினைக்க கவலையாய் இருக்கிறது.

ஒரு மாதிரி ஏழு மணியானதும் வீட்டை விட்டுக் கிளம்பினேன். சாப்பிடக் கூட எதுவும் எடுக்கல்ல. நான் 'சாப்பாட்டு ராமி' தான். ஆனா சாப்பிடும் மனநிலை அப்ப இல்லை. தெருமுனைக்கு வர வர என் நெஞ்சு திக்கென்றது.

"முதற் தடவையாய் அது இல்லாம றோட்டிற்கு வந்திருக்கன்!" ஒரு மாதிரியா பஸ் பிடிச்சு ஒவிஸ் கிட்ட வந்திறங்கியாச்சு. "ஐயோ"! பஸ் ஸ்டான்டிற்கு கொஞ்சம் தள்ளி நாலு பேர் நிக்கிறாங்களே! என்ன செய்யிறது! ஐயோ! என் பக்கத்தில வாறாங்களே! கடவுளே! பிள்ளையாரப்பா! அவங்க என்னட்ட ஏதும் கேட்கக் கூடாது! நீதான் காப்பாத்தணும்! " ஒரு மாதிரியா அவங்களும் என்னை கடந்து போயிட்டாங்க. இன்னமும் எனக்கு அமைதியில்லை.

"ஐயோ"! பஸ் ஸ்டான்டிற்கு கொஞ்சம் தள்ளி நாலு பேர் நிக்கிறாங்களே! என்ன செய்யிறது! ஐயோ! என் பக்கத்தில வாறாங்களே! கடவுளே! பிள்ளையாரப்பா! அவங்க என்னட்ட ஏதும் கேட்கக்கூடாது! நீதான் காப்பாத்தணும்! "

"'ஒவிஸ் பில்டிங்' தெரியுது. கிட்ட வந்திட்டன். ஐயோ! கீழ இரண்டு பேர் நிக்கிறாங்களே! கடவுளே! காப்பாத்து! ஒரு நாள் லீவு போட்டு உன் கிட்டை வாரேன் ! அவங்க எதுவும் கேட்காம விட்டா, பிரச்சினை வராட்டா உனக்கு ஒரு தேங்காய் உடைக்கிறன்! " என்னை அறியாமலே என் கை கழுத்திலிருந்த செயினிலுள்ள பிள்ளையாரைப் பற்றிக் கொண்டது.

லஞ்சத்துக்கு பிள்ளையார் கூட ஆசைப்பட்டார் போல , அவங்க எதுவும் கேட்கலை. ஒவிசுக்குள்ள போய் 'சைன்' பண்ணிட்டு என் இடத்துக்கு ஓடினேன். லாச்சிய திறந்து எல்லாத் தையும் கொட்டினேன். அதோ! அதுவும் விழுகிறது! "கிடைச்சிட்டு!" நேற்றிரவிலிருந்து அமைதியற்றிருந்த என் மனம் சாந்தி யடைகிறது.

அவசர அவசரமா அதை எடுத்து பத்திரப்படுத்திட்டு அம்மாவுக்கு தொடர்பை ஏற்படுத்தினேன். 'டிங் டிங்.....' மணி அந்தப் பக்கம் அடிப்பதற்கான ஒலி கேட்கிறது. ஆனால் யாரும் எடுக்கவில்லை. "என் நிலமையை மறந்திட்டு என்ன செய்யிறாங்க?" கோபம் கோபமாய் வருகிறது.

"ஹலோ" "அம்மாவின் குரல் தான். அம்மா! நான் தான் கதைக்கிறன். என்ரை "ஐடென்டி காட்" கிடைச்சுட்டுது!" அடையாள அட்டை கிடைத்த நிம்மதியில் அம்மா பெருமூச்சு விடுவது எனக்கு இந்தப்பக்கம் தெளிவாகக் கேட்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










**மக்கள் அனைவரும்
கமெரா போன்களை
பாவிக்கவேண்டும்.
இதன்மூலம் குற்றச் செயல்களை
படமெடுத்து குற்றவாளிகளை
கண்டுபிடிக்க உதவலாம்.**







பொலிஸ் மா அதிபரின் கூற்றுக்கு இணங்க நாட்டில் அனைவரும் கமரா போன்களை பாவித்தால்..... நிலமை எப்படியிருக்கும்? எங்கள் கற்பனையில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டைத்தீக்குளை

வ.ஐ.ச.ஜெயபாலன்



## பாகம் 5

**பாலனுக்கு ஒன்றுமே புரிய வில்லை. பாலனுக்கு இன்ன பிரக்ஞை தவறவில்லை. எனினும் விசைப் பாவை போல தன்வசமில்லாமலே செயற்பட்டான். நாற்று மேடையிலிருந்து ஒரு மாபெ ரும் வித்து முளைத்தெழு வது போல ஈர மணலை உத றியபடி கிராமத்து அழகோ டும் ஐந்து காயங்களோடும் ஒரு தேவதை மித ந்தது. அந் தக் கிராமத்துத் தேவதை யின் மேனியில் முத்துக்க ளாக உருண்ட நீர்க் காயங்க ளில் இருந்து கசிந்த இரத் தத்தோடு கலந்து செம்மணி களாக நிலத்தில் சிந்தியது.**

**என்னயிது** என்னயிது என்று பாலன் பதட்டமடைந்தான். அவளது இடுப் பிலும் மார்பிலும் நீலக் கடல் அலை யொன்று சேலையாக உறைந்து போயிருந்தது. கனிவோடு ஆசீர் வதிப்பது போல அந்த அழகி கைகளை அசைத்தாள். பின்னர் நிதானமாக "அடிமை விலங்கைச் சுமக்கிற என் மக்களுக்கு மருந்தா கவும், விருந்தாகவும் என் குருதி யையும் தசையையும் தந்தேன்" என்றபடி புன்னகைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே"

அந்த அழகி மெல்ல மெல்ல சேறாக கிடந்த ஆற்றில் இறங்கி வழமையாக அயலூர்ப் பெண்கள் குளிக்கும் கற்பாறைத் தேக்கத்தின் பக்கமாய் நடந்தாள். உடல் சிலிர்த்தபடி குளிர்ந்த தண்ணீரில் இறங்கியவள் பெண்கள் குளிக்கும் பக்கமாக நகர்ந்து நாணல் புதர்களில் மறைந்தாள்.

பாலன் காடு போல சமைந்து நின்றான். சடா முடி விழுதுகள் தாழ்ந்து அசைய முனிவரைப் போல நிமிர்ந்த ஆலமரமொன்று "வேரும் விழுதுமில்லாத கீழ் பிறப்புத்தான் ஆனாலும் நல்ல காரியம் செய்தான் என்று பாராட்டியது. சூரிய ஒளியிலும் மெல்ல எழுந்த பாடலிலும் கிளர்ச்சியுற்ற பாலியாறு பாலனைப் பார்த்துக் கண்சிமிட்டியது. தலைக்கு மேலே கண்களைக் குருடாக்கும் பிரகாசத்தோடு பசிய இலைக் கூரை எரிந்துகொண்டிருந்தது. காற்றில் வருகிற கீதத்தை யார் பாடுகிறார்கள்? மருத இலைகளைத் தாண்டி வருகிற ஒளித் தீயுள் முடிவின்றி விரிந்து செல்கிற பிரபஞ்சமா பாடுகிறது? அல்லது எங்கும் அலைகிற காற்றேதான் பாடுகிறதா? அவனது நொந்து போன ஆன்மாவிற்கு மருந்தாக முடிவிலியிலிருந்து ஒழுகிய அந்த நல்லிசையின் தேன் தாரையில் மனசு தொற்றிக் கொண்டது.

மண் நான், விண் நான், சமுத்திரம் நான்- உன்
வாழ்வின் வளனாம் தாய் நிலம் நான்
என்னுள் புதைந்த இளையவரின்
உள்ள முரசம் அதிர்கிறதே
உழிச் சங்கை ஒலிக்கிறதே

மானிடன் மகளே உயிர்த்தெழுவாய்
வாழ்வெனும் மந்திர வாழ் எடுப்பாய்
அகால மரணமுன் குலக் கொடியை
அழித்திட முன்னம் வழி மறிப்பாய்.





அங்கு உயிர்ப்பின் ஆதாரமாவதற்கு பாலியாற்றில் எஞ்சிய நீரும் அந்தப் பாடலுமே போதியதாய் இருந்தது. அது ஆதியில் உலகத்திலிருந்த நீரும் ஒலியும் என்பதைப் பாலன் உணர்ந்தான். ஆதியிலிருந்த நீர் புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி வல்ல சுரராகி பறவையாய் பாம்பாகி கல்லாய் மனிதராய் கூர்ப்படைந்த போது ஆதி ஒலி சொல்லாகி வார்த்தையாய், பாடலாய் கதை யாய் எழுத்தாகி கவிதையாய் பூத்தது.

இசையாய் எழுகிற கவிதை உயிர் காக்கும் சாவா அமுதாகும். பாடல் கேட்டு பாலியாற்றின் இரு கரைகளிலும் மேடிட்டிருந்த பூமியிலிருந்து விடுதலை விடுதலை என்கிற மந்திர வார்த்தை எழுந்தன. "விடுதலைப் போருக்கு அணிவகுப்பீர் வெற்றியால் எமக்குயிரளிப்பீர்" என்கிற மந்திர வார்த்தைகள் சுப்பிரபாத சுலோகம் போல ஒலித்தன. அப்போது ஈழத் தமிழனின் பொல்லா விதி அந்த ஆற்றின் மீதும் நாணல்கள் நரைக்கும் கரைகளின் மீதும் உயர்ந்த மருத மரங்களின் மீதும் காட்டின் மீதும் இடியும் மின்னலுமாக இறங்கியது. ஆற்றின் மறுபக்கமாக துப்பாக்கிகள் வெடித்தன. இராணுவ வண்டிகள் கர்ச்சித்தன. காடுகளில் பாய்ந்த துப்பாக்கிச் சன்னங்களில் ஆற்றங்கரைக் காடும் நாணல்களும் சடசடத்தன. துள்ளி எழுந்து சைக்கிளில் தாவிய பாலன் ஆற்றங்கரையைக் கடந்து வயல்வெளியில் இறங்கினான். பின் தொடர்ந்த துப்பாக்கி வெடி ஒலிகள் இப்போது மிக அண்மையில் கேட்டன. பாலனுக்கு பொட்டலாய் விரிந்த வயல் வெளிப் பாதையில் செல்ல அச்சமாயிருந்தது. அரைக்கிலோ மீற்றர் தொலைவிலிருந்த பற்றைக்காடுகள் வரைக்கும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு மறைந்து போக வழியில்லை. பற்றைக்காடு போய்ச் சேரும் வரை தனது முதுகின் வழியாக உயிரில் துப்பாக்கிச் சன்னங்கள் தைத்துவிடப் போகிறது என்ற அச்சத்துடன் வேகமாகச் சைக்கிளை மிதித்தான். பற்றைக் காடை வகுடெடுத்துச் சென்ற ஒற்றையடிப் பாதையில் ஏறிய போதுதான் அவனுக்கு உயிர் வந்தது. அதன் பின்னர் தான் அவனுக்கு ஆற்றில் குளிக்கிற தேவதைப் பெண்ணின் நினைவு வந்தது. அவளிடம் ஒரு வார்த்தை சொல்லாமலும் ஆபத்து என்று கூட குரல் கொடுக்காமலும் நட்டாற்றில் விட்டு விட்டு ஓடி வந்து கோழைத்தனத்தை நினைத்துப் பாலன் வெட்கப் பட்டான்.

**தொடரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடுகுவேலியும், ஒரே கடலும்..!

கானா பிரபா

**கிடுகுவேலி நாவலில் வரும் நிர்மலாவைப் போலத் தான் ஒரே கடலில் வரும் தீப்தி. நிர்மலாவுக்குத் தேவை தன் அபிலாஷைகளைப் புரிந்து தன்னோடு இருந்து வாழக்கூடிய அன்பான கணவன். தீப்தியும் கூட தன் ஆசாபாசங்களைப் புரிந்துகொள்ளாமல் வேலையில்லாக் கணவனின் பிள்ளை மெஷினாகவும், சாப்பாட்டு இயந்திரமாகவும் இருக்கும் நிலையில் ஒரு மேதாவி ஆணொருவனின் புத்திசாலித்தனமும், பரிவும் இவளை ஈர்க்கையில் தன்னையே இழக்கத் தயாராகிறாள்.**

**எதிர்பாராத** சமயத்தில் ஆபத்பாந்தவனாகத் தன் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்த நாதன் என்ற அந்தப் பொருளாதார மேதையின் காருண்யம் தீப்தியை நாதன் மேல் காதல் கொள்ளவைக்கின்றது. மத்தியதரக் குடும்பத்து பெண்ணின் அடையாளமாகத் தன் ஆசாபாசங்களை ஒடுக்கி, பதிவிரதையாக இருக்க தீப்தியால் முடியவில்லை. தன்னை ஆழமாக நேசிக்கும், தன்மேல் பரிவைக் கொடுக்கும் ஒரு துணையாக பேராசிரியர் நாதனைப் பார்க்கின்றாள். இப்படியான மீறல்கள் எல்லாம் நடைமுறை வாழ்வுக்குச் சரிப்பட்டு வருமா? குடும்ப வாழ்வின் ஒழுக்க விதிகள் என்னாவது? இந்தக் கேள்விக்கெல்லாம் நேர்கோட்டில் பதில் இல்லை. இந்த ஒழுக்க விதிகளை எந்த எல்லையில் வைத்துத் தீர்மானிப்பது? யார் இதைத் தீர்மானிப்பது. இப்படியும் சிலர் வாழத்தான் செய்கின்றார்கள். அதைத் தான் தீப்தியும் செய்தாள்.

டாக்டர் நாதன் உலகமே போற்றும் ஒரு பொருளாதார மேதை. அவருடைய சித்தாந்தமெல்லாம் "இந்த உலகமே பொருளாதார அடிப்படையில் தான் இயங்குகின்றது, உணர்ச்சிகளின் குவியலில் அல்ல" என்பது. அவர் இருக்கும் அதே அப்பார்ட்மெண்டில் வேலையில்லாப் பட்டதாரி ஜயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மற்றும் அவள் மனைவி தீப்தி . ஒரு சமயம் கணவன் ஊரில் இல்லாத வேளை குழந்தை ஆபத்தான நிலையில் இருக்கையில் பண வடிவில் நாதனின் உதவி தீப்திக்குக் கிடைக்கின்றது. தொடர்ந்து தன் கணவன் ஜயனுக்கும் ஒரு வேலைவாய்ப்பு நாதன் சிபார்சில் கிடைக்கின்றது. சதா வீட்டில் முடங்கிக் கிடக்கும் தீப்திக்கு நாதன் என்ற பெரும் மேதையின் அறிவாற்றலும், பரிவும் அவன் மேல் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது. நாதனிடம் தன்னை இழக்கின்றாள். டாக்டர் நாதனின் எச்சத்தைத்தன் கருவாகத் தாங்குகின்றாள். அதைக் கூட ஒரு பெருமையான விடயமாகவே இவள் எடுத்துக்கொள்கிறாள். டாக்டர் நாதன் தான் இனித் தன் உலகம் என்று முடிவெடுக்கின்றாள். ஆனால் டாக்டர் நாதனோ தன் கொள்கையில் இருந்து விலகுபவர் அல்லவே. தீப்தியின் கைமாற்றுக்கூட பொருளாதார ரீதியான சமப்படுத்தல் என்று வரையறுத்துக் கொள்கின்றார். பொருளாதார ரீதியில் இருக்கும் இந்த உலகத்தில் நான் மட்டும் என்ன விதிவிலக்கு என்று தீப்தியை அவர் ஒதுக்குகின்றார். இந்த முரண்பட்ட வாழ்வில் சிக்கித் தவித்த தீப்திக்கு மனப் பிறழ்வு ஏற்படுகின்றது. தொடர்ந்து தீப்தியின் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களும், டாக்டர் நாதனின் பொருளாதாரச் சித்தாந்தங்கள் நடைமுறை வாழ்வில் எவ்வளவு தூரம் பொருந்தக் கூடியவை என்பதையும் பேசுகின்றது இந்த ஒரே கடல் என்னும் மலையாள சினிமா.

இந்தப் படம் வந்து (ஆகஸ்ட் 2007), ஒரு சில மாதங்களுக்குள் பார்த்து விட்டேன் என்றாலும் இப்படம் ஏற்படுத்திய தாக்கம் இன்றுவரை மாறவில்லை. ....என்ற பெயரில் பெங்காலி எழுத்தாளர் எழுதிய நாவலே இயக்குனர் ஷியாம பிரசாத் இயக்கத்தில் வெளியாகியிருக்கின்றது. இதே நாவலை சத்யஜித் ரே படமாக்க முனைந்ததாகவும் செய்தி உண்டு. ஒரே கடலைப் பார்த்து முடித்ததுமே நாவலை எவ்வளவு தூரம் சிதைக்காமல் கொண்டு வந்திருக்கின்றார் என்பதை நாவலை வாசிக்காமலேயே உணரமுடிகின்றது. காரணம், குறிப்பிட்ட நான்கு பாத்திரங்களினூடாக நுட்பமான மன உணர்வுகளைக் கீற்றாகக் கொண்டே இப்படம் நகர்கின்றது. வேறு எந்த சினிமாவுலக வர்த்தக சமாச்சாரங்களுமே இல்லை. இயக்குனர் ஷியாம பிரசாத்தின் முன்னைய படங்கள் கூட இதே அளவுகோலில் இருப்பதாக அவரின் பிரத்தியேக இணையத்தளம் மூலம் அறிய-முடிகின்றது.

டாக்டர் நாதனாக மம்முட்டி, நடுத்தரக் குடும்பத் தலைவி தீப்தியாக மீரா ஜாஸ்மின், அவளின் கணவன் ஜயனாக (அஞ்சாதே) நரேன், மற்றும் மம்முட்டியின் தோழி பெல்லாவாக ரம்யா கிருஷ்ணன் என்று இந்த நால்வருமே ஒரே கடலைத் தாங்கும் பாத்திரங்கள். பொருத்தமான தேர்ந்தெடுப்புகளும் கூட. ஒசப்பச்சனின் இசை படத்தில் பேசும் நுட்பமான உணர்வுகளை வாத்தியத்தில் காட்டியிருக்கின்றது. சிறந்த நடிகைக்காக மீரா ஜாஸ்மினுக்கும், சிறந்த இசையமைப்பாளருக்காக ஒசப்பச்சனுக்கும், சிறந்த எடிட்டராக வினோத் சுகுமாரனுக்கும் கடந்த ஆண்டின் கேரள அரசின் விருது இப்படத்திற்காகக் கிடைத்திருக்கின்றது.

மிகப் பெரும் பொருளாதார மேதையாகத் தன் பேச்சிலும் மிடுக்கிலும் மம்முட்டி வாழ்ந்து காட்டியிருக்கின்றார். இந்த உணர்ச்சிபூர்வமான பந்த பாசங்களெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது என்ற எடுத்தெறிந்த தோரணையில் நடப்பது, காலமாற்றங்களில் தன் பொருளாதாரச் சித்தாந்தங்களை பிரயோகிக்க முடியாத யதார்த்த வாழ்வில் வாழ நினைத்துக் கஷ்டப்படுவது, தன் நிலை இறங்கித் தறிகெட்டுப் போவது என்று மம்முட்டிக்கு இன்னொரு சொல்லக் கூடிய பாத்திரப் படைப்பு இப்படத்தின் மூலம் கிடைத்திருக்கின்றது.

தியேட்டரில் விசில் அடித்துப் படம்


PUBLIC LIBRARY JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவும், கதாநாயகனை டாய் போட்டுக் கூப்பிடவும் தமிழ் சினிமாவில் அதிகம் பயன்படும் மீரா ஜாஸ்மின் ஒரே கடலில் மிகப்பெரும் நடிப்புக் கடலாக இருக்கின்றார். தன் தரப்பு நியாயங்களையும், கனவுகளையும் பக்கம் பக்கமாக வசனம் பேசி நிரப்பாமல் தன் முகபாவங்களாலேயே காட்டிச் சிறப்பித்திருக்கின்றார். வாடகை, குடும்பச் செலவு, குழந்தைக்கு மருத்துவச் செலவு என்று பாறங்கல்லாய் அழுத்தும் செலவினங்களுக்கு வேலையில்லாக் கணவனிடம் கையேந்துவது, டாக்டர் நாதனிடம் அசட்டுச் சிரிப்போடு பணம் கேட்டு நிற்பது, டாக்டர் நாதனின் ஆசைக்கு முடிவெடுக்க முடியாமல் திணறுவது, டாக்டர் நாதனையே பின்னர் தன் வாழ்வாக வரித்துக் கொண்டு கனவுலகில் வாழ்வது, புத்தி பேதலித்து முரண்பட்ட வாழ்வில் திணறுவது என்று தன் நடிப்பில் வித்தியாசமான பரிமாணங்களைக் காட்டியிருக்க மீராவுக்கு இப்படம் பெரும் தீனி.



தவறு செய்தவள் திருந்தி வாழ்வது, அல்லது செத்துப் போவது இந்த மாதிரியான இந்திய சினிமா இலக்கணத்தைக் கூட உடைத்திருக்கின்றது இப்படத்தின் எதிர்பாராத முடிவு. சரி-பிழை, குடும்ப விசுவாசம் - நம்பிக்கைத் துரோகம் இந்த எல்லைகளைக் கடந்து பரிவும், நேசமும் தேவைப்படும் யாருமே இணைந்து வாழ இந்த சமூகக் கட்டுக்களும், சம்பிரதாயங்களும் தேவையில்லை என்பதை "ஒரே கடல்" சொல்லி நிற்கின்றது. ஆனால் இந்தக் கரு சரியா, பிழையா, டாக்டர் நாதன், தீப்தியின் உறவு ஏற்றுக்கொள்ளத் தக்கதா? என்பதற்கான தர்க்கங்களை இப்படம் பேசவில்லை. பார்வையாளனிடமே அந்தப் பொறுப்பைக் கொடுக்கின்றது. அதுதான் இப்படத்தின்/ படைப்பின் நேர்மை.

"நல்லாப் போங்க... இப்பவே போங்க.... உங்கள் கடமைகளையெல்லாம் முடிச்சிட்டு வாங்க. அதுவரை நான் காத்திருக்கிறன். ஐந்து வருஷமாகக் காத்திருக்கிறன். இனி எத்தனை வருடமானாலும் காத்திருக்கிறன். இனி எத்தனை வருடங்கள் வேண்டுமானாலும் காத்திருக்கிறன். எப்ப நீங்கள் எனக்காகவும், குழந்தைகளுக்காகவும் வாழ வருகிறீர்களோ, உங்கட மனதில் நாங்கள் இருவரும் முழுமையாக எப் போது வாழ முடியுமோ அப்போது தான் நான் இந்தக் கட்டிலில் படுப்பன்...."(கிடுகுவேலி நாவலில் நிர்மலா)

ஒரு பெண்ணின் உணர்வுகளையும், ஆசாபாசங்களையும் புரிந்து கொள்ளாமல் வாழத்தலைப்படும் ஆண் சமூகத்துக்கு இரண்டு வேறு தண்டனைகளைக் கொடுத்திருக்கின்றார்கள் "கிடுகுவேலி" நிர்மலாவும், "ஒரேகடல்" தீப்தியும்.

கானா பிரபா





எதுக்கு நின்னுக்கிட்டெ சாப்பிடுறீங்க?

பொண்டாட்டி சம்பாத்தியத்துல உட்கார்ந்து சாப்பிடறான்னு மத்தவங்க கேலி பண்ணக் கூடாதில்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE LIVES OF OTHERS

அனுஷா






## ஜேர்மன் திரைப்படம்

**ஹொலிவுட்டின்** அளவு கடந்த ஆதிக்கத்தினால் அதன் படங்களில் மூழ்கி பல நல்ல ஐரோப்பியப் படங்களை நாம் தவறவிட்டு விடுகின்றோம். சராசரி அமெரிக்கர்களிலும் பார்க்க சமூக அரசியல் விடயங்களில் நுணுக்கமான விளக்கங்களைக் கொண்டவர்கள் ஐரோப்பியர்கள். கடந்த கால வரலாறு அவர்களுக்குக் கற்பித்த முதிர்ச்சி இது. இதே தன்மையும் அந்த வேறுபாடுகளும் அவர்களின் திரைப்படங்களிலும் தெரியும். படம் பார்த்து விட்டு வந்த பின்னும் பார்வையாளர்களை ஆழமாகச் சிந்திக்க வைப்பதில் கெட்டித்தனம் மிக்கவர்கள் ஐரோப்பியர்கள். அதேயளவிலான நுட்பம் சராசரி ஹொலிவுட் படங்களுக்கு இருக்கின்றதா என்றால் இல்லையென்றுதான் கூற வேண்டும். இது இரண்டு சமூகங்களினதும் அரசியல் சிந்தனைகளின் பயனாக இருக்கலாம்.





The lives of Others என்கின்ற ஜேர்மன் திரைப்படம் ஆதிக்கக் கலாசாரம் மிக்க அரசு இயந்திரங்களை இயக்கும் மனிதர்களைப் பற்றியதொரு அருமையான படமாகும். கொர்பச்சோவின் பேரெஸ்ட்ரொயிக்கா (திறந்த தாராளவாதக் கொள்கை) இயக்கமும் பேர்லின் சுவர் உடைப்பும் நடக்கப்போகும் காலத்தில் கிழக்கு ஜேர்மனியைக் களமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கதை இது. 2007 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஐரோப்பிய திரைப்பட விருதினையும் சிறந்த வேற்று மொழிப்படத்துக்கான ஒஸ்கார் விருதினையும் தட்டிக் கொண்ட படம்.

கிழக்கு ஜேர்மன் இரகசிய பொலீஸான ஸ்டாஸியின் ஒற்றர் படையைச் சேர்ந்த ஈவிரக்கமில்லாத ஒற்றன்தான் வைஸ்லர். ஒரு பிரபல நாடகாசிரியனையும் அவனது நடிகைக் காதலியையும் கண்காணிக்கும் பொறுப்பு அவனது மேலதிகாரி மூலமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொடர்பாடல் அமைச்சரிடமிருந்து ஒப்படைக்கப்படும்பொழுது மகிழ்ந்து போகின்றான். சோஷலிஸ ஜேர்மனியின் பாதுகாப்புக்கும் அதன் இருப்புக்கும் குந்தகம் விளைவிக்கும் பல விமர்சனங்களை கலைஞர்களும் எழுத்தாளர்களும் ஆங்காங்கே செய்து கொண்டிருக்கின்றனர் என்பது கிழக்கு ஜேர்மன் அரசுக்கு மிகவும் தொந்தரவாக இருந்தது.

இவர்களின் வாயடக்குவதற்கு அவர்களை நெருக்கமாகக் கண்காணித்து அவர்கள் எங்கேனும் அரசுக்கு எதிரான ஒரு சிறு நடவடிக்கையை எடுத்தது நிறுவப்பட்டாலும் அவர்களின் கலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தண்டனையை வழங்கிக் கொண்டிருந்தது. இப்படியான நடவடிக்கைக்கான முக்கியமான சாட்சியங்களை முன்வைப்பதன்மூலம் அமைச்சரின் நன்மதிப்பினைப் பெற்றுத் தான் வாழ்க்கையில் முன்னேற நினைக்கின்றான் வைஸ்லர்.

இதன்படி நாடகாசிரியர் ட்ரேமனின் தொடர்மாடிக் கட்டட வீடு முற்றாக bug பண்ணப்படுகின்றது. அவர் தனது வீட்டில் எங்கேயிருந்து பேசினாலும் மேலே ஒதுக்குப்புறமான கூரை மாடியில் அமர்ந்து ஒட்டுக் கேட்கலாம். தனது 24 மணிநேரப் பணியை வெகு உற்சாகமாகத் தொடங்கிய வைஸ்லர் நாளாக நாளாக மாற்றமடைகின்றான்.



சோஷலிஸ கிழக்கு ஜேர்மனிக்கு ஆதரவாகவும் அதற்கு எதிராகவும் என இருவகை மனிதர்களே இருக்கலாம் என்று அவன் இதுவரை காலமும் போட்டு வந்த படம் கிழிக்கப்படுகின்றது. சோஷலிஸம் வாழ வேண்டும் ஆனால் அது நீதியுடையதாக இருக்க வேண்டும் என்று கருதி மேற்கு நாடுகளுக்குத் தப்பிச் செல்லும் வாய்ப்பிருந்தும்கூட தனது நாட்டின்மீது கொண்ட பற்றால் கிழக்கு ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ட்ரேமனை அறிகிறான். ட்ரேமனின் காதலியின்மீது மோகம் கொண்டதாலேயே அவளை அடைவதற்காக அமைச்சர் ட்ரேமனைத் தீர்த்துக் கட்ட நினைக்கிறார் என்பதைக் கண்டு அவனுக்குள் வெறுப்பு கிளம்புகின்றது. அமைச்சரின் நடவடிக்கைகளும் அவரைக் காக்கா பிடித்துக் கொண்டிருக்கும் தனது மேலதிகாரியின் நடவடிக்கைகளும் அவனுக்கு இதொன்றும் சோஷலிஸத்தினைக் காப்பாற்றும் போராட்டமல்ல மாறாக அதிகாரத்திலுள்ளவர்களின் ஊழலே என்பதை உணர்த்துகின்றன. அவன் மெல்ல ட்ரேமனின் வாழ்க்கைப் பிரச்சினைகளில் ஈடுபடத் தொடங்குகின்றான். வைஸ்லரின் இந்த மனமாற்றமே முழுக்கதையும்.



தனது பிரஜைகளைக் கண்காணிப்பதற்கு ஒரு அரசு எவ்வளவு தூரம் போகலாம் என்பது இப்படத்தில் மிக விவரமாகக் காட்டப்படுகின்றது. இவ்வளவு சிரமங்கள் இவ்வளவு செலவுகள் இவ்வளவு மனித வளங்கள் எல்லாவற்றையும் இந்தப் பயனில்லாத விடயத்துக்கு செலவழிக்க முடியுமா என்று ஆச்சரியப் பட்டுப் போகின்றோம். Power must be soooo enticing! அதிகாரத்தைக் காப்பாற்ற மனிதன் எதையும் செய்வான். என்ன கொடுமையடா வாழ்க்கை.

ஒரு இலட்சியத்துக்காகப் போராடுபவர்களுடைய வாழ்க்கையில் இருக்கும் Passion, காதல் பாச உணர்வுகள் அவர்களை அடக்குபவர்களுடைய வாழ்க்கையில் இல்லை என்பதைக் காட்டிய விதம் எங்களை சிந்திக்கத் தூண்டியது. உண்மைதான். நாங்கள் பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களைப் பற்றித்தான் அதிகம் பேசுகின்றோம். அக்கொடுமைகளை இழைத்தவர்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கும் என்று யோசிப்பதில்லையல்லவா? அதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியதன் மூலம் அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதற்குத் துணை போகின்றவர்களைச் சற்று சிந்திக்க வைத்திருக்கிறார் இயக்குனர். இதற்கும் மேலாக, ஊடகவியலாளர்களுக்கெதிராக இன்று கட்டவிழ்க்கப்பட்டி ருக்கும் அடக்குமுறையையும் அன் றைய கிழக்கு ஜேர்மனியின் நிலை யையும் ஒப்பிடாமல் இருக்க முடிய வில்லை. இப்படி எல்லோரையும் அஞ்சி நடுங்க வைக்கும் சக்தி ஒரு எழுத்துக்கு இருக்கின்றது



என்பதை நினைக்க உடல் சிலிர்த்தது.

இது பிரபல இயக்குனர் ப்ளோரியன் ஹெங்கல் வொன்டொனர் ஸ்மார்க்கினால் எழுதி நெறிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவரது திரைக்கதை வசனம் அருமையிலும் அருமை. ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு ப்ரேமும் கதை நகர்த்தலுக்கான ஒரு தடயத்தையாவது விட்டுச் செல்லுகிறது. ஒரு system உடைந்தவுடன் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் மாற்றங்கள் எவ்வாறு தன்பாட்டில் நிகழ்கின்றது என்பதை பேர்லின் சுவர் உடைந்தது என்ற செய்தியைக் கேட்டவுடன் ஸ்டாஸி அலுவலர்கள் மிகச் சாதாரணமாகத் தங்கள் வேலையை நிறுத்திவிட்டு அலுவலகத்திலிருந்து வெளியேறி நடப்பதைக் காட்டுவதன் மூலம் சித்திரித்திருக்கின்றார். ஒரு கணம் சர்வ வியாபகமாக இருந்த பயங்கரமான அதிகாரம் அடுத்த கணமே பொடிப் பொடியாகின்றது. எப்படித்தான் நடிகர்களைத் தேர்ந்தெடுக்கின்றார்களோ தெரியவில்லை. எல்லோருமே தங்கள் பாத்திரங்களோடு கன கச்சிதமாகப் பொருந்தினார்கள். மொத்தத்தில் CID , TID, NIB என்று இங்கெல்லாம் பணி புரிகின்ற அலுவலர்கள் அவசியம் பார்க்க வேண்டிய திரைப்படம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண்களின் பொன்மொழிகள்

1
உங்கள் மனைவியை திருடியவனை தண்டிக்க விரும்பினால் அவளை அவனிடமே விட்டு வையுங்கள்

2
பெண்கள் எப்போதும் சிறந்த இலட்சியங்களுக்கு இலக்கு காட்டுவார்கள். ஆனால் அடைய விடமாட்டார்கள்.

3
திருமணத்தின் பிறகு கணவனும் மனைவியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஒருவரை யொருவர் பார்க்க மாட்டார்கள் ஆனால் ஒன்றாகவே இருப்பார்கள்.

4
கட்டாயம் திருமணம் செய். நல்ல மனைவி அகப்பட்டால் மகிழ்ச்சி. கெட்டவளாயிருந்தால் நீ தத்துவவாதி

5
இதுவரை எந்த ஆணாலும் பதில் தர முடியாத ஒரே கேள்வி அவன் மனைவி விரும்புவது என்ன என்பது தான்

6
நானும் என் மனைவியும் இருபது ஆண்டுகளாக சந்தோஷமாக இருந்தோம். அதற்குப் பிறகு தான் திருமணம் செய்தோம்.


7
திருமணம் என்பது ஒரு புது விதப் போர். அதில் மட்டும் தான் நீ எதிரியோடு தூங்குகிறாய்

8
எந்த இலத்திரனியல் வங்கியாலும் முடியாத விரைவான பணப்பரிமாற்றம் திருமணம் மட்டும் தான்.

9
உன் மனைவி தேவதை என்று சொல்கிறாய். நான் என்ன செய்ய ? என் மனைவி இன்னும் என்னோடு வாழ்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளைச் சுமந்த படி காத்திருக்கிறேன்



காலக் கிரமத்தில்
நீ என்னை
கரம் பிடிப்பாயென
காத்திருந்த எனக்கு-நீ
காணாமல் போன செய்திதான்
காதெட்டியதெடா!

நீயே நானாகி
வாழ்ந்த எனக்கு-இன்று
தீயே வாழ்வாகி தினமும்
நீயும் நானும்
கருகிக் கொண்டிருக்கிறோம்!

நீ எங்கிருக்கிறாய்
தினமும் என்னோடு உறவாடும்
என் நினைவுகளுக்கு நான்
என்ன பதில் சொல்வது ! ?

இனியவனே! நீ
இறுதியாகத் தந்துவிட்டுப்போன
உன் கற்பனையில் கருவாகி
கையெழுத்தில் உருவான
உன் கவிதைப் புத்தகம் கூட
இன்னும் திறக்கப்படாமல்
மூடியே கிடக்கிறது
நம் காதலைப் போல

சிறு பொழுது
கண் தானும் துஞ்சினாயோ...?
கொல்லும் நினைவுகளுடன்
தினமும் நான்
துஞ்சலின்றி அஞ்சியே
வாழ்கிறேன்


வாசிக்கப்படாத
வார்த்தைகளாகிப் போன
உனது கவிதைகளைப் போல
நம் காதலும்
ஆகிவிடக் கூடாதென- தினம்
ஆண்டவனை யாசித்தபடி
யோசித்துக்
கொண்டிருக்கிறேன்.
என் காதலா ?

உன் தன்மானத்தின் மேல்
நீ கொண்ட மோகம்
உன்னை என்னிடம் சேர்க்கும்
என்ற நம்பிக்கையில்
நம் கனவுகளை
என் கண்களில் சுமந்தபடி
உன் நினைவுகளால்
நிறைந்து கனக்கும்
இதயத்துடன்
உணர்வுகளைத் தொலைத்து
உனக்காக காத்திருக்கிறேன்!

மிருசுவிலூர் எஸ். கார்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலையைக் காதலித்த கராத்தே வீரன்

வாழ்ந்த காலம் கொஞ்சம் சேர்ந்த புகழ் அதிகம்

**கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக என்கிறார் வள்ளுவர். அதாவது தான் கற்ற கல்வியை அதன் படி ஒழுக வேண்டும் என்பது அதன் பொருள் அவ்வாறே தான் கற்ற கலையை சரியான முறையில் பயன்படுத்தி பின் இள வயதில் புகழின் உச்சியைத் தொட்டவர் தான் புருஸ்லீ.**


**அவர்** இறந்து இன்று 35 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை சகலரின் நெஞ்சங்களில் தங்கி வாழும் சிறப்பையும் ஒரு கலைஞன் அதற்கும் மேலாக ஒரு நடிகன் பெற்றார் என்றால் அதுவும் புருஸ்லீயாகத் தான் இருக்க முடியும்.

புருஸ்லீயின் கால், கை வீச்சுக்களின் வேகத்துக்கு சினிமா பிரேம்களால் கூட ஈடு கொடுக்க முடியவில்லை. வழமையாக ஒரு செக்க னுக்கு 24 பிரேம் தான் சினிமாவின் கணக்கு. ஆனால் புருஸ்லீயின் வேகம் காரணமாக அது 34 ஆக மாற்றியமைக்கப் பட்டது.

நவம்பர் மாதம் 27ஆம் திகதி 1940 ஆம் ஆண்டு சன்பிரான்ஸிக்கோவில் உள்ள ஜக்சன் வைத்திய சாலையில் புருஸ்லீ பிறந்தார்.

இவருடைய இயற்பெயர் கீ யூப் பென் ஆனால் இந்தப் பெயர் அமெரிக்க தாதியின் வாயில் நுழையச் சிரமப்பட்டதனால் அவர் புருஸ் என்றார். அதுவே மருவி புருஸ்லீ ஆகியது.

புருஸ்லீக்கு 3 வயது இருக்கும் பொழுது அவருடைய குடும்பம் ஹொங் ஹொங் சென்றது. 12 வயது வரை லா சலி பாடசாலையில் கற்ற புருஸ்லீ மேற்படிப்பை சென் பிரான்ஸின் கெவியர் கல்லூரியில் கற்றார்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959 ஆம் ஆண்டளவில் புருஸ்லீ ஹொங் ஹொங்கில் ரவுடிக் கும்பல் தலைவனின் மகனுடன் சண்டையிட்டார். இதனால் அச்சப்பட்ட இவர் தந்தை,புருஸ்லீயை மீண்டும் சன்பிரான்ஸிக்கோவிற்கு அனுப்பி வைத்தார்.

அவருடைய புகழ் பரவ ஆரம்பிக்கின்றது. பாடாசாலைக் கல்வியை முடித்து வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் மெய்யியல் கற்க ஆரம்பித்தார். இங்கே தான் அவர் தன்னுடைய எதிர்கால மனைவியை சந்தித்தார்.

மிக இளவயதில் நடிக்க ஆரம்பித்த புருஸ்லீ "Batman" தயாரிப்பாளர் வில்லியம் டொனியரால் கண்டுபிடிக்கப்பட்டார்.



அவருடைய கண்டுபிடிப்பு சரிதான் என்பது பின்னர் நீருபிக்கவும் பட்டு விட்டது.

இவருடைய முதலாவது படம்' Big boss` ஆகும்.இது 1971 ஆம் ஆண்டு திரையிடப்பட்டது. ஆனால் இதற்கு முன்னரே புருஸ்லீ குத்துச்சண்டை சம்பியனாகவும், சிறந்த கராத்தே வீரனாகவும் அறியப்பட்டிருந்தார்.


புருஸ்லீயின் கண்களில் தோன்றும் தீப்பொறியும் அவருடைய அதிரடியும் 'Big boss` திரைப்படத்தை பெரும் புகழ்பெறச் செய்தது.ஏழைத் தொழிலாளர்களுக்கும் போதை வஸ்து கும்பலுக்கும் இடையிலான மோதலைக் குறித்து எடுக்கப்பட்ட படமான இது 12 மில்லியன் டொலரை வசூலித்து. 1972 ஆம் ஆண்டு "fist of fury" எனும் திரைப்படம் திரையிடப்பட்டது. 15`மில்லியன் டொலர் வசூலை கொட்டியது. இப்படத்தின் ஒரு காட்சியில் புருஸ்லீ 30 கராத்தே வீரர்களுடன் மோதுவது மிகவும் வியப்புக்குரியது.

'way to Dragon' என்ற படமே மீண்டும் புருஸ்லீயால் எழுதப்பட்டு இயக்கப்பட்டது. இதே ஆண்டு fist of fury ஆக. இந்தப் படமே புருஸ்லீயை குங்பூ கலையின் நாயகனாக உலகம் முழுவதும் பரவச்செய்தது.

புருஸ்லீயின் இறுதிப்படமான Enter the Dragon அமெரிக்காவில் மட்டும் 850,000 டொலரை அள்ளிக் கொட்டியது. உலகம் முழுவதும் 200



மில்லியன் டொலர்கள் அள்ளிய இப்படமே கராத்தே கலையின் முடிசூடா மன்னனாக இன்னும் மிளிரச் செய்தது.



சோகம் என்னவென்றால் இந்த வெற்றியைக் காண்பதற்கு புருஸ்லீ உயிருடன் இருக்கவில்லை. மர்மமான முறையில் ஜூலை மாதம் 20 ம் திகதி 1973 ஆம் ஆண்டு இறந்தார். இராப்பொழுதில் ஏற் பட்ட தலை யிடி காரணமாக மாத்திரை உட் கொண்டு உறங்கச் சென்ற புருஸ்லீ மீண்டும் எழுந்திருக்கவில்லை.

ஹொங் ஹொங்கின் குயின் எலிசபெத் மருத்துவ மனையில் கோமா நிலையில் அனுமதிக்கப்ட்ட புருஸ்லீ நினைவு திரும்பாமல் இறந்தார். இன்னும் கூட அவருடைய மரணத்தின் மர்ம முடிச்சுக்கள் அவிழவில்லை.

2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி ஹொங் ஹொங் அரசு 45 இலட்சம் டொலர் செலவில் 30 ஆள் உயர வெண்கலச் சிலையை திறந்து வைத்து புருஸ்லீயைக் கௌரவப் படுத்தியது.

சீனாவின் திரைப்பட நட்சத்திரமான புருஸ்லீயின் 65 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூர்ந்தே இது நிர்மாணிக்கப்பட்டது.



ஒரு கலையை எவ்வாறு கற்க வேண் டும் அக்கலையின் உச்ச நிலையை எவ்வாறு அடைய வேண்டும் என்று வழிகாட்டியவர் தான் புருஸ்லீ என்னும் கலைஞன்.

புருஸ்லீ இறந்து பல வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் புருஸ்லீயின் இடத்தை எவரும் இன்னும் நிரப்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வீசாதீர்

ஏதோ அவதியிலே ஏகுகிறீர்,
ஏனப்பா,
நீர் தாம் உலகு நிலை மாறிப்
பாதாளத்
தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
வாழி, என் தாழ்மை வணக்கங்கள்!

ஆள்சுருளும்
வெய்யிலிலே
நீர்போகும் வீதிநடைப் பாதையிலே
உய்யும் வகை தெரியா ஓர் மனிதன்,
கை இல்லான்,
தூங்குகிறான் போலக் கிடக்கின்றான்.
துன்புறுத்தி
வீங்கும் பசியால் விழுந்தானோ!

ஆங்கயலிற்
கொத்தவரும் காகத்தைப் பாரும்
குறைஉயிரோ,
செத்த உடலோ-தெளிவில்லை.

மஹா கவி



PUBLIC LIBRARY
JAFFNA





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்



**"பழைய படி வேலை செய்து என் இரண்டு பிள்ளைகளையும் காப்பாற்ற முடியுமா? என்கிறார் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் இரண்டு வருடமாக இருக்கும் சுகததாச, தென்னை மரத்தில் இருந்து விழுந்ததன் காரணமாக முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு கால்கள் இரண்டும் செயலிழந்து காணப்படுகின்றன இவருக்கு.**

ரூபன்

**அடுத்த** படுக்கையில் இன்னொரு நபர் இருக்கிறார். அவருக்கு 28 வயதுதான். துடிப்புமிக்க இளைஞர். ஆனால் அவன் கழுத்துக்கு கீழே பெரிய ஒரு கதை இருக்கின்றது. அவன் கைகளும் கால்களும் கூட இயங்க மறுக்கின்றன. ஒரு ஒன்றுகூடலின் போது நீச்சல் தடாகத்தில் தள்ளிவிடப்பட்டதனால் கழுத்தின் பின்புறம் முறிந்தே இந்த பரிதாப நிலை அவனுக்கு.


இந்த இரண்டு சம்பவங்களும் மிகவும் சோகமானவை. இவை முள்ளதண்டுக்கு ஏற்பட்ட பாதிப்பினால் உருவானவையாகும்.

எமது உடல் கட்டமைப்பில் முள்ளந்தண்டு தனிச் சிறப்பு வாய்ந்ததொரு அமைப்பாகும். அது நரம்பியல் தொகுதியின் ஒரு பகுதி அது மூளையிலிருந்து நரம்பு நார்களை ஏனைய இடங்களுக்கு கொண்டு செல்லுகின்றது.

இது நரம்புத் தொகுதியின் தொழில் சார்ந்த தன்னாட்சியை கட்டுப்படுத்தும் கலங்களையும் கொண்டுள்ளது. முண்ணான் ஒரு இணைப்புச் சாதனம்(cord) மூலம் செயற்பட்டு மூளைக்கும் உடம்பின் மற்ற பகுதிகளுக்கும் செய்திகளை பரிமாற்றுகிறது. இது சில தொழிற்பாடுகளை தானாக (மூளையின் துணையின்றி) செய்கின்றது. உதாரணமாகச் சொல்வதனால் நெருப்பில் பட்ட கையை மூளை உணர முன்பு திடீரென விரைவாக எடுத்தல்.

முண்ணான் சேதமடையும் போதோ அன்றி நெருக்கப்படும் போதோ (comression) சேதமடையும் பகுதிக்கு கீழ் பாதிக்கப்படும். உதாரணமாக கழுத்துப் பகுதி பாதிக்கப்படும் போது இரண்டு கையும் காலும் செயலிழக்கின்றன. நெஞ்சுக்குக் கீழான முண்ணான் சிதைவடையும் போது கால்கள் செயலிழக்கின்றதோடு மல கட்டுப்பாடும் அற்றுப் போகின்றது.

இந்தப் பிரச்சினையின் உக்கிரம் முண்ணானின் சேதத்தின் அளவில் தங்கியுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முண்ணான் பாதிப்புகள் எவ்வளவு தூரம் குணமடையலாம் என்பது பற்றி வைத்தியரால் ஆரம்பத்திலேயே கூற முடியாது. 12 தொடக்கம் 24 மாதங்களின் பின்பும் முன்னேற்றமிருக்கும். சிலர் இரண்டு வருடங்களோ அதற்கு கூடிய காலத்திலோ கணிசமான முன்னேற்றத்தை அடைகின்றனர். பொதுவாக விபத்துக்களால் தான் இப்படியான பரிதாபங்கள் நிகழ்கின்றன. மற்றும் யுத்த காயங்களும் உயரத்திலிருந்து விழுதலும் இதற்கு அடுத்த காரணமாகின்றது.

முள்ளந்தண்டில் வெடிப்புகள் ஏற்படும் போது உறுப்புக்களின் அசைவுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. முறிந்த எலும்புத்துண்டுகள் குறித்த இடத்திலிருந்து விலகாமல் இருக்கும் பொருட்டு இழு விசை traction க்கு உட்படுத்தப்படுகின்றனர். இது முறிவுகள் பொருந்தும் போது அவை விலகாமல் இருக்கவும் முண்ணான் மேலும் சேதமடையாமல் இருக்கவும் உதவுகின்றது. இப்படியான நோயாளிகளுக்கு சில வேளைகளில் உலோகத்திலான காப்புகளும் (metrol brace) முள்ளந் தண்டுக்கான இழுவிசையும் வாரக் கணக்கில் தேவைப்படுகின்றன.

இந் நோயாளிகளுக்கு தசைப் பலம் பாதிக்காமல் இருப்பதற்கு முறிவுகள் குணமாகும் பட்சத்தில் சுயமாக நிற்பதற்கும் உடற்பயிற்சி (physiotherapy) வழங்கப்படுகின்றது.

நோ நிவாரணிகள், போதிய ஓய்வு, உடலை நேராக வைத்திருப்பதற்கான பயிற்சி போன்றவை அளிக்கப்பட வேண்டும். நரம்பியல் சத்திர

Exhibit ES-4: உலகளாவிய முள்ளந்தண்டு சத்திர சிகிச்சை விகிதங்கள். 2008




சிகிச்சை என்பது நரம்பியல் குறைபாடு காணப்படும் போது அல்லது நரம்பியற் குறைபாடுகள் உடனடியாக ஏற்படுவதற்குரிய குணங்குறிகள் தென்படும் போதே வைத்தியரால் தீர்மானிக்கப்பட்டு செய்யப்படுகின்றன.

முண்ணான் நெரிசலுக்குரிய மற்றைய காரணங்கள் மேலதிக சோதனைகளின் பின்பு அது திரட்சியினால் ஏற்பட்டதாயின் சத்திர சிகிச்சையினால் குணப்படுத்தப்படுகின்றன. வயது முதிர்ந்தோரில் ஏற்படும் தாக்கம் சத்திர சிகிச்சையினால் நிவர்த்தி செய்யப்படுகின்றது.

இயக்கமற்று அசைவற்று இருப்பதுதான் முள்ளந் தண்டு சிதைவுகளினால் ஏற்படக் கூடிய மிகப் பயங்கரமானதும் பாரதூரமானதுமான விளைவாகும். பிறரில் தான் தங்கியிருக்க வேண்டுமே என ஒரு நோயாளி நினைப்பதால் அவர் மனரீதியாகவும் மிகவும் பாதிக்கப்படுகின்றார். இந்த பாதிப்புக்கு பெரும்பாலும் இளைய சமுதாயமே பாதிக்கப்படுகின்றது. இது நாட்டின் மனித வலுவை நேரடியாக பாதிக்கின்றது. உலகிலே முண்ணான் சிதைவுக்கு உள்ளாகுபவர்கள்

**சிகிச்சைக்கு முன்**

Patient from Connecticut in severe condition

**சிகிச்சைக்கு பின்**

Fully restored to health. No Crutches Needed






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 க்கும் 30 க்கும் இடைப்பட்ட வயதினர் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது.

இளவயதில் சக்கரநாட்காலி யில் தங்கியிருப்பது என்பது அங்கவீனத்தை குறிப்பதா காது. இவர்கள் சரியான பயிற் சியினால் சுயமாக இயங்கக் கூடியவர்களாகவும் தங்களு டைய அன்றாட அலுவல் களை கவனிக்கக் கூடியவர் களாகவும் மாறலாம். இவ்வா றானோரில் சிலர் சில நிறுவ னங்களுக்கு தலைமை வகிப் பவர்களாகவும் உன்னதமான பணிக ளுக்கு தம்மை அர்ப்பணித்த வர்களா கவும் சக்கர நாற்காலியில் உலாவி வருகின்றனர்.



முண்ணான் சேதமானது பெரும் பாலும் தடுக்கப்படக் கூடியது. சரி யான முதலுதவி மூலம் இதனைத் தடுக்கலாம். முள்ளந்தண்டில் காயப் படும் போது எலும்புகள் உடை ந்தோ ஆட்டம் காண்பவையா கவோ இருந்தால் உடைந்த துண்டு கள் விலகாமல் முண்ணானை தாக்காமல் ஸ்திர நிலையில் வைத் திருக்கலாம்.

இவ்வாறான இடரான நேரத்தில் நீங்கள் நோயாளியை தவறாக அசைத்தீர்களாயின் உடைந்த எலும் புத் துண்டுகள் விலகி முண்ணானை தாக்கலாம். எனவே முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட நோயாளியை வைத் தியசாலைக்கு கொண்டு செல்லும் போது கவன மாக இருக்க வேண் டும்.

இவ்வாறான நோயாளிகள் சிறுநீரக தொற்றுகளுக்கும் சுவாசப்பை தொற்றுகளுக்கும் முகம் கொடுக்கி றார்கள். கால்களிலுள்ள இரத்த குாய்களிலுள்ள இரத்தம் கட்டியாத லும் படுக்கைப் புண்ணும் நில மையை இன்னும் மோசமாக்கும்.

இருந்த போதிலும் இது வாழ்வின் முடிவல்ல இன்றைய நவீன யுகத்தின் முன்னேற்றமான தொழில் நுட்பத் தாலும் மேன்மையான நோய் பராம ரித்தலாலும் (nursing) இவர்கள் தப்பி வாழ்கிறார்கள்.

விளையாடும் போதும், வாகனங் களை செலுத்தும் போதும் வெடி கருவிகளை கையாளும் போதும், இதே போன்ற ஏனைய நடவடிக் கைகளின் போது கவனமாக இருங் கள்.




இருக்கிறம்
காத்திருப்பு 2
இருக்கை 6
ஒரு பொல்லாப்பும் இல்லை
மாதம் இருமுறை
ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்
இளையதம்பி தயானந்தா
நிர்வாக ஆசிரியர்
சாந்தி சச்சிதானந்தம்
உதவி ஆசிரியர்
ம. ஸ்கந்தரூபன்
ஆசிரியர் குழு
எஸ். ரஞ்சகுமார்
அப்துர் ரஹ்மான்

கௌரவ ஓவியர் ஆசை இராசையா
ஓவியர் சஞ்ஜீத்
வடிவமைப்பு க. மயூரன், முஜீன், க. பிரணவன்
கணினித் தட்டச்சு பா. கரன், சதிஸ்
தொடர்பு
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 60 2150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukkiram@gmail.com
கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.
இதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்ச அழகி
## மென்டோசா

**பச்சைக்கண்கள்,** செந்நிற கூந்தல், முத்துச்சிரிப்பு, நல்ல அறிவு எல்லாம் ஒருங்கே சேர்ந்ததனால் தான் என்னவோ வெனிசுலாவின் பொன்மகள் மென்டோசா இம்முறை 79 ஆவது பிரபஞ்ச அழகியாக வியட்நாமில் வெற்றி கிரீடம் சூடியுள்ளார்.

கடந்த மாதம் தான் 22 ஆவது வயது பிறந்த நாளை கொண்டாடிய இவர் ஒரு முறை வெனிசுலாவில் கடத்தல் கும்பலிடமும் மாட்டியுள்ளார்.

1986 ஜுன் 02 இல் வெனிசுலாவின் தலைநகர் கரகாஸில் பிறந்த மென்டோசா ஒரு பிரபல மொடல் அழகியுமாவர். 2007 இல் மிஸ் வெனிசுலாவாக தெரிவு செய்யப்பட்டவர்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்ன வேறுபாடு எனக் கேட்ட கேள்விக்கு மென்டோசா இவ்வாறு கூறினார். "ஒரு இடத்தை அடையவேண்டுமானால் நேரான பாதையில் செல்வதே இலகுவான வழியென ஆண்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நினைக்கின்றார்கள் ஆனால் வட்டப் பாதையில் செல்வதே இலகுவான வழியென பெண்கள் நினைக்கிறார்கள் ”என்றார்.



பொதுவில் தென்அமெரிக்க பெண்கள் அழகானவர்கள். பழுப்பு நிறமும் செந்நிற கூந்தலும் பச்சை நிற கண்களும் மெல்லிய உடலும் கொண்டவர்கள்.

பார்ப்பவரை சுண்டி இழுக்கும் கொள்ளை அழகு கொண்டவர்கள். இதனால் தான் என்னவோ பெரும்பாலும் இவர்கள் உலக அழகிகளாக தெரிவு செய்யப்படுகின்றனர் போலும்.

இதனை நிரூபிப்பது போல் இம்முறை மென்டோசா பிரபஞ்ச அழகியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கெரில்லாப் புரட்சி வீரர் சேகுவேராவினால் விரும்பப்பட்ட பெண்கள் அல்லவா தென்னமரிக்க அழகிகள் .சும்மாவா என்ன?


**ரோமியோ**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சை



சுதந்திரமென்ற பெயரில்
முதற்பிச்சை விழுந்தபோது
நாங்கள்
மகிழ்ந்துபோனோம்.

பின்னர்
அணைக்கட்டுக்கள்
நட்புறவுப் பாலங்கள்
பெருந்தெருக்கள் வீதிகள்
கட்டிடங்கள்
கைத்தொழில் பண்ணைகள்
தொலைக்காட்சி நிலையங்கள்
பிச்சைகள் தொடர்ந்தன......

வடிவங்கள் மட்டும்
வேறுபட்டு வேறுபட்டு
பிச்சை.....
விருத்தியடைந்து வந்தது.

உதவிகள்
ஒப்பந்தங்கள்
பயிற்சிகள்
ஆயுத தளபாடங்கள்
தொழில்நுட்பங்கள்
வேலைவாய்ப்புகள்
சந்தைகள் .......
பிச்சை ...... பிச்சை.....பிச்சை...

உண்ணும் உணவும்
உடுக்கும் உடை
உறங்கும் மனை
குடிக்கும் நீர்
சுவாசிக்கும் காற்று
எல்லாவற்றிலும்
பிச்சையும் கலந்திருந்தது.

கிட்டிய காலங்களில்
உலக அமைப்புகளில்
பதவிகள் கூட
பிச்சையாய்க் கிடைத்தன

பிச்சைத் துறையின்
அறுபதாண்டு கால
துரித அபிவிருத்தி
அதிசயிக்க வைக்கிறது



பிச்சை கொடுப்போர்
பிச்சை எடுப்போர்
பிச்சைத் துறைக்கு
பங்களிப்பு செய்வோர்
எல்லோரும் ஒன்றாக
பிச்சையாய் கிடைத்த
குளிரூட்டப்பட்ட
ஞாபகார்த்த சர்வதேச
மகாநாட்டு மண்டபத்தில்
கூடுகின்ற நாட்களில்
நகருக்குள் நடமாட
பிச்சைக்காரருக்கு தடை....!
மீறினால் கைது

ஆயினும்
இந்த நாட்களிலும் அனுமதிக்கப்படும்...!

நாகரீய உடையணிந்து
கைகுலுக்கி கட்டித் தழுவி
ஊடகத்துறை கூடிநிற்க
ஓடியோடிப் படமெடுக்க
காசோலைகளாய்
வங்கியாணைகளாய்
அவற்றுக்கான
உடன்பாட்டுக் கோவைகளாய்
கைமாற்றப்படுகின்ற
சில்லறை நாணயங்கள் அல்லாத
பிச்சைகள் மட்டும்....!

நிலாக்கீற்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாமணியின்

## பிரியாத ஆசை

**96 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்திய தேசிய ரீதியிலான சிறந்த நடிகைக்கான விருது இம் முறை தமிழ் நாட்டை எட்டிப் பார்த்திருக்கிறது. பருத்திவீரன் திரைப்படத்தில் நடித்ததன் மூலம் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியதற்காக அகில இந்திய ரீதியாக சிறந்த நடிகைக்கான விருது இம் முறை பிரியாமணிக்கு கிடைத்துள்ளது. பெருமைப் படவேண்டிய விடயம்.**









ஜூலை மாதம் 4 ஆம் திகதி 1984 ஆம் ஆண்டு கேரளாவின் பாலக்காட்டில் வாசு தேவ மணி ஐயர், லதா மணி ஐயர் தம் பதியினருக்கு பிறந்த இந்த அழகு தேவதை நடிப்புக்கு முன்பு மொடலிங் துறையில் ஈடுபட்ட ஒரு பெண்மணி.

காஞ்சிபுரம் சில்க்ஸ், ஈரோடு சில்கஸ், போன்ற சாறிகளுக் கான விளம் பரங்களில் மொட லிங் செய்த பிரியாமணி எடுப் பான தோற்றம் கொண்ட ஒரு அழகிமயில்.

தமிழ், தெலுங்கு, மலை யாளம் உட்பட பத்துக்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருந் தாலும் பருத்தி வீரன் என்ற படத் தில் இவர் ஏற்ற அச்சு அசல் கிரா மத்து பெண் வேடமே அகில இந் திய ரீதிக்கு இவரின் புகழை பர வச் செய்தது.

நினைத்தால் இனிக்கும், தோட்டா, மலைக் கோட்டை, பருத்திவீரன், கண்களால் கைது செய், அது ஒரு கனாக் காலம் என்பன பிரியாமணியின் குறிப் பிடத்தக்க சில தமிழ் படங்கள்.







1976 ஆம் ஆண்டில் வெளி வந்த 'சில நேரங்களில் சில மனிதர் கள்' படத்தில் நடித்தமைக் காக லக் சுமியும், 1978 ஆம் ஆண்டில் வெளி வந்த 'பசி' படத்திற்காக சோபாவும் 1985 இல் வெளிவந்த 'சிந்துபைரவி' படத்துக் காக சுஹாசினியும் 1986 இல் வெளியாகிய 'வீடு' படத் திற்காக அர்ச்சனாவும் தேசிய ரீதி யிலான சிறந்த நடிகைக்கான விருதினைப் பெற்றுள்ளனர். தற் போது இந்த வரிசையில் பிரியா மணியும் சேர்ந்துள்ளார்.

பிரியாமணி சிறந்த நடிகைக் கான விருதைப் பெற்ற வேளை சங்கர் தொலைபேசி யில் தொடர்பு கொண்டு வாழ்த் தியுள்ளார். வாழ்த்தியது மட்டு மல்லாமல் தன்னை வந்து சந்திக் கும் படியும் கூறியுள்ளாராம்.

பிரியாமணி தயாராக இருங்கள் ரோபோவில் வாய்ப்புக் கிடைக் கலாம் சுப்பர் ஸ்ராரோடு ஜோடி யில்லவா

**ரோமியோ**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு கட்டுவோம்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின்

# உள்ளூராட்சி வாரம்

*உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு இலங்கையில் நிர்வாகக் கட்டமைப்பினுள் முக்கியமான செயற்பணி ஒன்றை உள்ளூராட்சி வாரம் 2008 வேலைத் திட்டம் என்னும் தொனிப் பொருளில் ஜூலை 09 முதல் 15 ஆம் திகதி வரை நடத்தி முடித்துள்ளது.*

உள்ளூராட்சி வாரம் 2008 வேலைத்திட்டம் என்ற தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் 07 நாட்களைக் கொண்டதாகும். இந்த ஏழு நாட்களும் ஒவ்வொருதொனிப் பொருளின் கீழ் செயற்படுத்தப்பட்டது.

**1 ஆம்நாள்**

“சுகாதாரம், துப்புரவு ஏற்பாட்டு நாள்”. எனப் பெயரிடப்பட்டு பொது சுகாதார பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.





**2 ஆம் நாள்**

“கல்வி நூல்நிலைய அபிவிருத்திகள் விளையாட்டுகள்” என தலைப்பிடப்பட்டு சிறுவருக்கான விளையாட்டு மைதானம், பாலர் பாடசாலை, விளையாட்டு விழாக்கள் என ஒழுங்கு செய்யப்பட்டது.




# 2008 வேலைத் திட்டம்

**4 ஆம் நாள்**

“அபிவிருத்திச் செயற்திட்டங்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும்” தினம் என தலைப்பிடப்பட்டு சமூகநிலையங்கள், நூல் நிலையங்கள் போன்ற பௌதீக செயற்திட்டங்கள் பொது மக்களுக்கு வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆம் நாள்



"மக்கள் பயன்பாட்டுத் தினம்" என்ற தொனிப் பொருளில் குப்பைகளை ஒழுங்காக மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்தல், கொம்போஸ் உற்பத்தி போன்ற நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டது. அறிக்கைகளை தயார் செய்து வியோகித்தல், முன்னேற்றமீளாய்வு என்பன நடைமுறைப்படுத்தப்பட்டது.



## 6 ஆம் நாள்

"தகவல் தொழில்நுட்பமும் தொடர்பாடலும்" என்னும் தலைப்பில் கணணி பயன் பாட்டின் மூலம் வரி முகாமைத்துவம் தொடர்பானாய்வு




## 7 ஆம் நாள்

இறுதி நாள் சிறந்த முறையில் செயற்பட்ட அமைப்புகளையும், ஆட்களையும் ஊக்குவுக்கும் வகையில் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி மாகாண மட்டத்தில் வைபவங்கள் பல சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டன.







பேசிய பணம் இரகசியமாக
கிடைத்ததோ
தலைவருக்கு மட்டும்


மட்டுவில் ஞானக்குமாரன்

# வேலை நிறுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பு



நாளைய காத்திருப்போடு...!



## இளைஞர்களின் நிகழ்காலம் சமூகத்தின் எதிர்காலம்

**நாளைய சமாதானம்**

இன்றைய இளைஞர் சமுதாயத்தின் கையில் ஒரு முக்கிய பணி உள்ளது. அமைதியான ஒரு நல்ல சூழலை இந்நாட்டில் உருவாக்க ஒவ்வொரு பிரஜையும் உழைக்கவேண்டியுள்ளது. Future Peace என்ற அமைப்பு இந்தப் பணிக்காக இளைஞர்களை ஒன்றுதிரட்டுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து பல்லின மத சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இளைஞர் கூட்டம் ஒன்றிணைந்து சமாதானம் குறித்த செய்தியினை மக்களிடையே எடுத்துச் செல்ல உழைக்கின்றது. கடந்த வருடம் அநுராதபுரத்தில் கூடிய இவர்கள் பலநாட்கள் அங்கே தங்கியிருந்து மக்களோடு இணைந்து பல செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.





21, Siripa Lane, Colombo 05, Sri Lanka
Phone : +94 (0)11-2555247/8, Fax : +94 (0)11-2555249
Email : flict@sltnet.lk

FLICT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ONE STOP STUDIO FOR ALL YOUR REQUIREMENTS

SAARA
MEDIA HOUSE

#3 Torrington Avenue, Colombo-07 , Sri Lanka.
**Tel** +94 60 215 0836 **Fax** +94 11 258 5190
**e.mail** saaramedia@yahoo.com

Printed by : Sellaam Press, 110, Negambo Road, Paliyagoda.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org